Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ, பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கு
20% விசேட சலுகை

லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=

259, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

திருமுருகன் கொம் நெற்

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்வப்பிள்ளையார் கட்டடம்,
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம்
166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 11 ஹிஜ்ரி 1428 ரம்ழான் 24 (28.10.2005) வெள்ளிக்கிழமை இதழ்:28

# 40 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வவுனியா மாநாட்டில் எழுச்சி பிரகடனம்!

வவுனியா —

**வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நாற்பதாயிரத்துக்கும் அதிகமான தமிழ்பேசும் மக்கள் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் பங்கேற்று – வவுனியா பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் பிரகடனம் செய்தனர்.**



ஜூலை 27 வவுனியா பிரகடனத்தை வலுப்படுத்தும் வகையில் தமிழர் தாயக மாவட்டங்கள் தோறும் மக்கள் அணிதிரண்டு தமது அரசியல் அபிலாஷைகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தி வருகின்றனர். அந்தவகையில் வவுனியா முழுவதும் வாழ்கின்ற தமிழ் மக்கள் அணிதிரண்டு எழுச்சிபூர்வமாக பிரகடனம் செய்தனர்.

வவுனியா தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு வவுனியா நகரசபை விளையாட்டரங்கில் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமானது. இதில் பொதுச்சுடரை மாவீரரின் தாயார் இராஜேஸ்வரி ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை மாவீரர் லெப்.கேணல் குமணனின் தந்தையார் கந்தையா ஏற்றிவைத்தார். தொடர்ந்து 18 பேர் ஈகச்சுடர்களை ஏற்றினர்.

வவுனியா எழுச்சிப் பிரகடன ஏற்பாட்டுக் குழுத் தலைவர் ஜெயச்சந்திரன் தலைமையில் நிகழ்வு பேரெழுச்சியுடன் நடைபெற்றது. ஆசியுரைகளைத் தொடர்ந்து சிறப்புரைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்களான பத்மினி சிதம்பரநாதன், சிவ நாதன் கிஷோர், அரியநேந்திரன், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், பாடசாலை முதல்வர் அல்ஹாஸ் முகமது செரிப், புதுக்குளம் மாதர் சங்கத் தலைவர் கமலாதேவி ஆகியோர் நிகழ்த்தினர்.

இறுதியாக மக்கள் அனைவரும் கைகளை உயர்த்தி பேரெழுச்சியுடன் தமது பிரகடனத்தை வெளிப்படுத்தினர்.

வாழ்வுரிமையையும், சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபுவழித் தாயகம், தேசியம், தேசிய இனம், தன்னாட்சி என் பவற்றின் அடிப்படையில் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென்று வவுனியா மக்கள் நேற்று பிரகடனம் செய்தனர். (11 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினர் புலிகளுடன் இன்று சந்திப்பு

கிளிநொச்சி —

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறும்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வேவு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தபோது – ஆளில்லாத வேவு விமானம் வீழ்ந்து நொருங்கியது.

இதனால், இலங்கை விமானப்படை ஒப்

## தமிழீழ தேசிய கீதத்தை உருவாக்கும் முயற்சியில் பங்கேற்க புலிகள் அழைப்பு

கிளிநொச்சி —

தமிழீழ தேசிய கீதத்தை (தேசியப்பண்) ஆக்கும் அரும் முயற்சியில் பங்கேற்குமாறு தாயகத்திலும் உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழர்களிடம் விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அரசியற்துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் -

எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் வழிகாட்டுதலோடும், நெறிப்படுத்தலோ

அதை நிலைநிறுத்துகின்ற வகையில் தேசியக்கொடி, தேசிய மலர் என்பன ஏற்கனவே அறிவிக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளன.

ஆயினும், தேசியப் பண் ஆக்கப்படாத நிலையில் எமது கொடி வணக்கப்பாடலையே தேசியப் பண்ணுக்கு மாற்றாக நாம் பயன்படுத்தி வருகிறோம்.

தேசியப் பண் இன்றைய சூழலில் காலத்தின் இன்றியமையாத தேவையாகிவிட்டது. எதிர்காலத்தில் 'மீக்குயர்' பண்ணாக ஒலிக்கவிருக்கும் தமிழீழ தேசியப் பண்ணை ஆக்கும்

## திருமலையில் ஓட்டோ சாரதி நேற்று சுட்டுக்கொலை!

திருகோணமலை —

திருகோணமலையில் ஓட்டோ சாரதியொருவர் இனந்தெரியாத நபர்களால் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பைச் சேர்ந்த வீரசேகர அனுர (வயது 28) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

திருமலை மரத்தடி ஓட்டோ தரிப்பிடத்தில் நின்றிருந்த வேளை இவரின் வண்டியை வாடகைக்கு அமர்த்தியவர்கள் உவர்மலை என்னும் இடத்தில் வைத்து ஓட்டோவுக்குள் வைத்தே சுட்டனர்.

இதனால் அவர் சம்பவ இடத்திலேயே

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வேவு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தபோது - ஆளில்லாத வேவு விமானம் வீழ்ந்து நொருங்கியது.

இதனால், இலங்கை விமானப்படை ஒப்பந்த விதிகளுக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் இடம்பெறவிருக்கும் இந்தச் சந்திப்பு முக்கியம் பெறுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

யற்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அரசியற்துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் -

எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் வழிகாட்டுதலோடும், நெறிப்படுத்தலோடும் கடந்த கால் நூற்றாண்டு காலத்துக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டுவந்த விடுதலைப் போராட்டத்தினூடாக, ஈழத்தமிழர் தாயகத்தில் ஒரு நடைமுறை அரசு நிறுவப்பட்டுள்ளது.

யப் பண்ணுக்கு மாற்றாக நாம் பயன்படுத்தி வருகிறோம்.

தேசியப் பண் இன்றைய சூழலில் காலத்தின் இன்றியமையாத தேவையாகிவிட்டது. எதிர்காலத்தில் 'மீக்குயர்' பண்ணாக ஒலிக்கவிருக்கும் தமிழீழ தேசியப் பண்ணை ஆக்கும் அரும் முயற்சியில் பங்கேற்குமாறு தாயகத்திலும், உலகெங்கிலும் பரந்து வாழ்கின்ற எமது இனிய தமிழ் உறவுகளை அன்புடன் அழைக்கிறோம். (12 ஆம் பக்கம் பார்க்க)


திருமலை மரத்தடி ஓட்டோ தரிப்பிடத்தில் நின்றிருந்த வேளை இவரின் வண்டியை வாடகைக்கு அமர்த்தியவர்கள் உவர்மலை என்னும் இடத்தில் வைத்து ஓட்டோவுக்குள் வைத்தே சுட்டனர்.

இதனால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து அங்கு விசேட தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# இரு தரப்பும் அழைப்பு விடுத்தால் அனுசரணைப் பணி தொடரும்!

## நோர்வே வெளியுறவு அமைச்சர்



ஒஸ்லோ —

இலங்கையில் புதிய ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் இரு தரப்பினரும் சமாதான முயற்சிகளில் பங்களிப்பு செய்யுமாறு தமக்கு அழைப்பு விடுத்தால் தொடர்ந்து அனுசரணைப் பணியில் ஈடுபடுவோம் என்றும் -

ஆனால், இரு தரப்பினருக்கும் எம்மீது சந்தேகம் இல்லாதிருந்தால்தான் எமது பங்கை ஆற்றமுடியும் என்றும் நோர்வேயின் புதிய வெளிவிவகார அமைச்சர் ஜொனாஸ் கார்ஸ்ரோர் தெரிவித்தார்.

இலங்கை சமாதான வழிமுறையில் அனுசரணையாளராக செயலாற்றி வரும் நோர்வே அரசு இலங்கை சமாதான வழிமுறைகளில் தொடர்ந்து பங்காற்றுமா என்பது குறித்து இவர் பி.பி.சி தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

கேள்வி - இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடந்துமுடிந்த பின்னர் ஜே.வி.பி, ஹெல உறுமயவின் ஆதரவுடன் ஒரு அரசாங்கம் பதவிக்கு வந்தால் (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் தேர்தலுக்கு தடை அவசியமில்லை

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு —

வடக்கு - கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடைக்காலத் தடை விதிக்கவேண்டிய அவசியமில்லை என உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

எனினும், எதிர்வரும் 7 ஆம் திகதி மீண்டும் இது தொடர்பான விசாரணையை நடத்த உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தக்கூடாது என்ற இடைக்காலத் தடையை விதிக்கக்கோரி முற்போக்கு முன்னணி இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தது.

இந்த மனுவுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், மாற்றுக்கொள்கைகளுக்கான மையமும் இடையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்தனர். இந்தநிலையில் இடையீட்டு மனுவின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்தது.

தேர்தல் ஆணையாளர் கொத்தணி வாக்குச்சாவடிகளின் மூலம் வாக்கெடுப்பை நடத்தக்கூடிய சூழல் காணப்படுவதாக நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார். தேர்தல் ஆணையாளரின் இந்த அறிவிப்பை ரணில் விக்கிரமசிங்கவின் சட்டத்தரணி ஏற்றுக்கொண்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா மாநாட்டுக்கு சென்ற

# இளைஞர்களைப் படையினர் ஓமந்தையில் திருப்பி அனுப்பினர்

வவுனியா —

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்கக் கோரி - வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சி நாள் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வடமராட்சி கிழக்கிலிருந்து சைக்கிள்களில் சென்ற 150 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள், ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

நேற்றுமாலை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சிநாள் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வடமராட்சி கிழக்கிலிருந்து 150 இற்கு மேற்பட்ட இளைஞர்கள் சைக்கிள்களில் தேசியத் தலைவரின் திருவுருவப் படத்தைத் தாங்கியவாறு சென்றனர்.

வவுனியா மாநாட்டில் இளைஞர்களை கலந்துகொள்ளவிடாமல் ஓமந்தையில் உள்ள சோதனைச்சாவடியில் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

படையினர் மேற்படி இளைஞர்களை வவுனியா செல்ல அனுமதி மறுத்ததையடுத்து இளைஞர்கள் வீதியில் அமர்ந்து மறியல் போராட்டத்தை நடத்தினர்.

இதனால் வன்னிப் பகுதியிலிருந்து வவுனியாவுக்கும், வவுனியாவிலிருந்து வன்னிக்குமான (12 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

EXPOAiR

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011 2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com

Your friend in the skies...

இலங்கையில்
முன்னணி வகிக்கும்
உங்கள் உள்ளூர்
விமான சேவை...



# நாட்டுப்பற்றாளர் குகதாசனின் பூதவுடல் தீயுடன் சங்கமம்



யாழ்ப்பாணம்—

நாட்டுப்பற்றாளர் எஸ்.குகதாசனின் இறுதிக் கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

தமிழ் மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் அரும்பெரும் பணியாற்றியவரும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபருமாகிய எஸ்.குகதாசனுக்கு முன்னாள் அதிபர் சந்திரசேகர் புலிக்கொடி போர்த்தி நாட்டுப்பற்றாளர் கௌரவத்தை வழங்கினார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் ஊர்வலமாக கோம்பயன் மணல் மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்விமான்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கடைகளை திறக்கலாம்

யாழ்ப்பாணம்—

தீபாவளி தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமையிலிருந்து யாழ். மாவட்டத்திலுள்ள சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களும் தமது விருப்பத்திற்கேற்ப (ஞாயிற்றுக் கிழமை உட்பட) கடைகளைத் திறந்து, பூட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

# பயிற்சிப் பட்டறை நிறைவு நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்—

சர்வதேச கல்வியகம், ஜப்பான் ஆசிரியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரிய சங்கங்களின் ஒன்றியம் ஆகியன, இணைந்து நடத்திய உளநல சமூக உதவியாளர்களாக ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல் பயிற்சிப் பட்டறையின் நிறைவுநாள் நிகழ்வு இன்று முற்பகல் 11.30 மணிக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

தமிழர் ஆசிரிய சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும்

இந்த நிகழ்வில் வலிகாம வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் கு.சதாசிவமூர்த்தி, தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைத்தலைவர் திருமதி ச.ஜெயராசா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

## கணனிப் பயிற்சியை

# நிறைவு செய்தோருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது

மட்டுவில்—

தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பின் கீழ் லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய நிதியுதவியுடன் நடத்தப்படுகின்ற இலவச கணனிப் பயிற்சி நிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

சாவகச்சேரி டச்சுவீதியிலுள்ள மேற்படி பயிற்சி நிலையத்தில் யாழ் கல்லூரி ஆசிரியர் கிருஷ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபரும் தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவருமான க.அருந்தவபாலனும், பாரியாரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் நிறுவனத்தில் பயிற்சிபெற்று வெளியேறிய 3 தொகுதி மாணவர்கள் சுமார் 195 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சான்றிதழ்களை பிரதமவிருந்தினரின் துணைவியார் திருமதி சா.அருந்தவபாலன் வழங்கிக் கௌரவித்தார்.

# விசேட பிரார்த்தனை

யாழ்ப்பாணம்—

நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்காகவும் - எதிர்காலத்தில் சமூகங்களுக்கிடையே சகோதரத்துவம், சமத்துவம் வேண்டியும் யாழ். முகமதியா ஜும்ஆ பள்ளிவாசலில் (புதுப்பள்ளி) இன்று பிற்பகல் 1.30 மணிக்கு விசேட பிரார்த்தனை ஒன்று இடம்பெறவுள்ளது.





ராஜா யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக -சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த
கஜினி
அடுத்த வெளியீடு - விக்கிரம், அஸின், வடிவேல் நடித்த
மஜா
காட்சிகள்:-10.30,2.30, 6.30, மட்டும் (பு.நேரம்)

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு மூன்றாவது ஜனத்திரள் வாரமாக ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல், கலாபவன்மணி, நடித்த
மழை
காட்சிகள்:-11.00,3.00,7.00, (பழையநேரம்)


# பனைமரம் தறிப்பதற்கான அனுமதிகளை பனை அபிவிருத்திச் சங்கங்களே வழங்கும்

## -புதிய நடைமுறை முதலாம் திகதி முதல் அமுல் -

யாழ்ப்பாணம்—

யாழ். குடாநாட்டில் பனைமரம் தறிப்பதற்கான அனுமதி வழங்கும் அதிகாரத்தை பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்பேற்றுக் கொள்வதாக யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சமாசம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ். குடாநாட்டில் பனை மரங்கள் கண்மூடித்தனமாக தறிக்கப்படுவதால் பனைவளம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதனால் எதிர்காலத்தில் குடாநாடு பாலைவனமாகும் அபாயம் எதிர்கொள்ளப்படுகிறது. பனைவளம் அழிவதைத் தடுத்து நிறுத்தி முக்கிய தேவைகளுக்கு மட்டும் பனைமரம் தறிப்பதற்கான அனுமதி வழங்குவதற்கான அதிகாரத்தை யாழ். குடாநாட்டில் இயங்கும் பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது.

01-11-2005 ஆம் திகதியிலிருந்து இந்த நடைமுறை அமுலுக்குவருகிறது.

தமது சொந்தத் தேவைகளுக்கு தங்கள் சொந்த பனைமரங்களைப் பயன்படுத்த விரும்புவோர் கீழ் காணும் நடைமுறைகளுக்கு ஏற்ப விபரங்களை உறுதிப்படுத்தி அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

☆ உங்கள் பிரதேசங்களிலுள்ள பனை அபிவிருத்திச் சங்கங்களிடம் இருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்று அதனை முழுமையாகப் பூர்த்தி செய்து கொடுத்தல் வேண்டும்.

☆ விண்ணப்பப் படிவம் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட பின்னரே மரங்கள் தறிக்கப்பட வேண்டும்.

☆ தறிக்கப்படும் மரங்கள் வேறு பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்வதானால் சங்கத்தின் அனுமதிக் கடிதங்கள் பெற்று மரக் கூட்டுத்தாபனத்தில் கொடுத்து அனுமதி பெறல் வேண்டும்.

☆ மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு அமையாமல் தறிக்கப்படும் அல்லது எடுத்துச் செல்லப்படும் பனை மரங்கள் பறிமுதல் செய்யப்பட்டு முறைகேடான செயல் எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

பனைச்செல்வத்தை அழியவிடாது பாதுகாக்க வேண்டும் எனக் கருதும் அபிமானிகள், ஆதரவாளர்கள், சூழலியலாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து அக்கறையோடு செயற்பட்டு மேற்குறித்த நடைமுறைகளைப் பேண ஒத்துழைப்பு வழங்குமாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
ஆர்ஜா, சோனியா அகர்வால் மற்றும் பலர் நடித்த
ஒரு கல்லூரியின் கதை
தீபாவளி வெளியீடாக
தனுஷ், பிரியாமணி நடித்த
அது ஒரு கனாக்காலம்
காட்சிகள்;-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த
சாணக்கியா
காட்சிகள் 11.00, 2.45, 5.00 (புதிய நேரம்)

வாசிப்பு மாதம்
"வாசியுங்கள் அகவிழி திறக்கும்"
வாசிப்போம் வாசித்ததை யோசிப்போம்
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
தொடர்புகளுக்கு:
No.03 Torrington Avenue, Colombo - 7.
காசோலை எனின் அகவிழி என்ற பெயருக்கும், காசுக் கட்டளை எனில் கவலொக்ரவுனில் (Havelock) மாற்றக் கூடியதாக அனுப்பவும்.
T.P. 011- 2506272, E-Mail:ahavili@viluthu.org
(C/4683)

மனோகரா யாழ்ப்பாணம்
பார்த்தீபன் நடித்த
குண்டக்க மண்டக்க...
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 8.30
30 முதல்
முதன்முறையாக
யாழ்.மாவட்டத்தில்
DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன்
இளைய தளபதி
விஜய் வெடிக்கும்
சிவகாசி
விசேட காட்சி
காலை 8.30 மணிக்கு


## - சங்கானை கல்விக் கோட்ட -

# சைவ கலாசார விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

சங்கானை—

சங்கானைக் கல்விக்கோட்ட சைவ கலாசார மேம்பாட்டு விழாவும், இந்த விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழாவும் நாளை பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வு- பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் நடைபெறும் பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகும். ஆலயத்திலிருந்து நாதஸ்வர இசையுடன் சமய குரவர்கள் திருவுருவப் படங்களுடன் திருமுறைச் சுவடிகளும், ஊர்வலமாக தொல்புரம் - வழக்கம்பரை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தை வந்தடைந்து அங்கிருந்து விழா மண்டபத்தைச் சென்றடையும்.

இந்த நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன், வலி.மேற்கு சங்கானை உதவிப் பிரதேச செயலர் திருமதி தே.பாபு, சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ. அச்சுதம்பிள்ளை ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் விழா மலரை வெளியிட்டு வைப்பார்.

அத்துடன் பாடசாலை மாணவர்களின் மனனம், பண்ணிசை, புராண படனம், கதாப்பிரசங்கம் போன்ற நிகழ்வுகளும், பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளதாக விழா அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

(48)

# பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சியில் இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப் பணியகத்துக்கு கீழ் வரும் பணிநிலைகளுக்கு புதிதாக ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தகைமையுடையவர்கள் தங்கள் தனி வரலாறு அடங்கிய (சுய விபரம் ) வேண்டுகையுடனும் தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய சான்றிதழ்களுடன் 04-11-2005 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி கந்தசாமி கோவில் அருகாமையிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ள நேர்முகத்தேர்வுக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பணிநிலை - தொழில்நுட்ப அலுவலர்

***(தகைமைகள்)***

கட்டட நிர்மாணத்துறையில் தொழில்நுட்பத் தகைமையுடன், தொழில்சார் தகைமையுடையவராகவும் இருத்தல் அவசியம்.

தேசிய தராதர கணக்கீட்டு தொழில்நுட்ப கற்கை நெறியில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

## பணிநிலை - முகாமைத்துவக் கல்லூரி இயக்குநர்

***(தகைமைகள்)***

அரச நிர்வாக கல்விச் சேவையில் பணிபுரிந்து ஓய்வுபெற்றவராக இருப்பது விரும்பத்தக்கது. அகவை 50 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். ஆங்கிலம் ஓரளவு எழுத வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்.

*ஆளணி நிர்வாகப்பகுதி,*
*தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,*
*நடுவப்பணியகம்,*
*கிளிநொச்சி.*

(C/4768)

# மகிந்த ஆதரவு சுவரொட்டிகள்; ஐக்கிய தேசியக் கட்சி சீற்றம்!

கொழும்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக ஜே.வி.பியினர் பெருமெடுப்பில் சுவரொட்டிகளை ஒட்டி வருகின்றனர். இவற்றை அகற்ற பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காவிடின் தாமும் சுவரொட்டிப் பிரசாரத்தில் குதிக்க நேரிடும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.

தேர்தல் ஆணையாளருடன் கட்சிச் செயலாளர்கள் நடத்திய சந்திப்பின்போது - வேட்புமனுத் தாக்கல் செய்த நாளிலிருந்து சுவரொட்டிகளை ஒட்டுவதில்லை என்று இணக்கம் காணப்பட்டிருந்தபோதிலும், பிரதமர் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவித்து தொடர்ந்தும் சுவரொட்டிகள் ஒட்டப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் முதல் ஓரிரண்டு நாட்கள் அனைத்து வேட்பாளர்களினது சுவரொட்டிகளையும் பொலிஸார் அகற்றினர். கடந்த வார இறுதியிலிருந்து மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து ஒட்டப்படும் சுவரொட்டிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் -

இவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்காதுவிட்டால் தாமும் நாடு முழுவதும் பெருமெடுப்பில் சுவரொட்டிகளை ஒட்டப்போவதாக ஐ.தே.க மேலும் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி தேர்தலில் யார் வென்றாலும் தொழிலாளர் வர்க்கத்துக்கு பயனில்லை

கொழும்பு

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ அல்லது ரணில் விக்கிரமசிங்க தேர்வு செய்யப்பட்டாலும், தொழிலாளர் வர்க்கத்துக்கு எந்தப் பயனும் ஏற்படாது என்று ஜே.வி.பி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஞு.லால் காந்த கூறினார்.

மகரகமவில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஜே.வி.பியின் தொழிற்சங்க ஊழியர்கள் கூட்டத்தில் பேசுகையில் லால் காந்த இதனைத் தெரிவித்தார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுடன் நெருங்கிச் செயற்படுவதன் மூலம் தொழிற்சங்கங்கள் தங்களது உரிமைகளைப் பெற முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க கூறுவதைப் போல் அதிகாரப் பகிர்வின் மூலம்தான் அனைத்து இன மக்களும் ஒருங்கிணைந்து வாழ முடியும் என்பதில்லை.

அதிகாரப்பகிர்வில்லாமலே ஒன்றிணைந்து வாழ முடியும். நாட்டின் தனியார் மற்றும் அரச ஊடகங்கள் அனைத்தும் பாரபட்சமாக செயற்படுகின்றன. சுதந்திரமாக செயற்படுவதில்லை என்றும் லால் காந்த கூறினார்.

# மகிந்தவின் திருமலை பயணத்துக்கு துறைமுக சபையின் வாகனங்கள்

சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ திருகோணமலையில் மேற்கொண்ட தேர்தல் பரப்புரைப் பணிகளுக்கு துறைமுகஅதிகாரசபை வாகனங்கள் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப் பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதலே துறைமுக அதிகாரசபையின் வாகனங்கள் இந்தப் பரப்புரைக் கூட்டத்துக்கான பொருட்களை ஏற்றி வந்தன. மேற்படி சபையினரது வாகன ஓட்டுநர் பத்திர எண்களை நாம் பதிவு செய்துள்ளோம். துறைமுக சபையின் பொறியாளர்களுடன் தொழிலாளர்களும்கூட இந்தப் பரப்புரைக் கூட்டத்துக்கு பயன்படுத்தப்பட்டனர் என அக்கட்சி மேலும் குற்றஞ்சாட்டியுள்ளது.

## பகிரங்க விவாதம் நடத்த

# ஐ.தே.கட்சி விடுத்த சவாலை ஏற்றுக்கொண்ட சோபித தேரர்!

கொழும்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுடன், பௌத்த மதம் தொடர்பான பகிரங்க விவாதம் நடத்தும் சவாலை ஏற்றுக்கொள்வதாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் அறிவித்துள்ளார்.


கடந்த 23ஆம் திகதி வெளியான திவயின நாளிதழில் - ரணிலுடன் பௌத்த மதம் தொடர்பான விவாதம் நடத்த, புத்த பிக்குகள் தயாரா என்று ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனரத்ன சவால் விடுத்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த ஓமல்பே சோபித தேரர்-

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் நவம்பர் 17 ஆம் திகதிக்கு முன்னதாக பௌத்த மதம் தொடர்பான விவாதங்களை நடத்த ரணில் முன்வரவேண்டும்.

ராஜித சேனாரத்ன தனது நேர்காணல் மூலம் பௌத்த பிக்குகளை மட்டுமல்ல, ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரரையும் அவமதித்துள்ளார். மேதானந்த தேரரை ஒரு கீழ்த்தரமான அரசியல் வாதியாக சித்தரிக்க முயற்சிக்கிறார் ராஜித சேனரத்ன. இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ரணிலின் தேர்தல் அறிக்கையில் பௌத்த மதம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளவை குறித்து விவாதிக்க நாங்கள்



தயாராக உள்ளோம். இந்த விவாதத்தை மிகுந்துவத்த குணானந்த தேரர் சிலை அருகே நடத்தலாம் என்றும் ஓமல்பே சோபித தேரர் அழைப்பு விடுத்துள்ளார். (தே)

# ஒரு கோடி ரூபா செலவில் தேர்தல் கண்காணிப்பு!

கொழும்பு

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை வரவுள்ள ஆசிய நாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக அரசாங்கம் சுமார் 1 கோடி ரூபாவை செலவிட வேண்டியுள்ளதாகத் தேர்தல் செயலகத்தின் பிரதான கணக்காளர் எச்.ஏ.எஸ் ஹப்புஆராச்சி தெரிவித்தார்.

இந்தியா, பாகிஸ்தான், பூட்டான், நேபாளம், பங்களாதேஷ், மாலை தீவு ஆகிய நாடுகளிலிருந்து 28 தேர்தல் கண்காணிப்பாளர்கள் இந்த முறை ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புக்கென வருகை தரவுள்ளனர்.

அவர்களுக்கு அரச தலைவர்களுக்கான கவனிப்பு வழங்க வேண்டியுள்ளது. அவர்களின் விமானப்பயணச் சீட்டுகள், தங்குமிடவசதி, கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான போக்குவரத்து வசதிகள் ஆகிய அனைத்தையும் தேர்தல் செயலகம் வழங்கவேண்டியுள்ளது.

இந்தமுறை தேர்தல் கண்காணிப்புக்கென சுமார் 100 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் வருகைதரவுள்ளனர். அத்துடன், ஐரோப்பிய ஒன்றியம், பொதுநல வாயநாடுகள் அமைப்பு மற்றும் சில ஐரோப்பிய நாடுகளின் கண்காணிப்பாளர்களும் வரவுள்ளனர். அவர்களுக்கான செலவுகளை அவர்களே ஏற்றுக்கொள்ளவுள்ளதாகவும் ஹப்பு ஆராச்சி மேலும் தெரித்தார். (01)

# வாக்காளர்களை அழைத்துவர ஒரு கோடி ரூபா செலவாகும்!

## தேர்தல் செயலகத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாக்களிப்பதற்காக வரும் சுமார் 3 லட்சம் வாக்காளர்களுக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்துகொடுப்பதற்காகச் சுமார் ஒரு கோடி ரூபா வரை செலவாகும் என்று தேர்தல் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் தெரிவித்தார்.

இந்தச் செலவையும் சேர்த்து இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலுக்கான செலவு நூறுகோடியினையும் தாண்டும்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் இருக்கும் வாக்காளர்களை, இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருக்கும் கொத்தணி வாக்குச்சாவடிகளுக்குக் கொண்டு வருவதற்காக அவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்க தேர்தல் செயலகம் தீர்மானித்துள்ளது.

இதற்கென வாடகைக்கு வாகனங்கள் அமர்த்தப்படவுள்ளன.

இதனால் மக்களை அழைத்து வருவதற்காக பஸ், லொறி, உழவு இயந்திரம் மற்றும் படகுகளுக்கென இந்தப் பணம் செலவிடப்படவுள்ளது.

கொழும்பு வாடகை வாகனச் சாரதிகள் அறவிடும் கட்டணத்தைவிட, மிக அதிக கட்டணத்தை வடக்கு - கிழக்கு வாக்காளர்களைக் கொண்டுவருவதற்கு வாடகை வாகன உரிமையாளர்கள் கோருவதாகவும் வடக்கு-கிழக்கு பிரதேச செயலாளர்கள் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளனர். (01)

# புலிகளின் பகுதியில் தேர்தலை தடை செய்யக்கோரி மேலுமொரு வழக்கு

கொழும்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த தடைவிதிக்கக் கோரி தேர்தலில் போட்டியிடும் சிறிலங்கா தேசிய முன்னணியின் தலைவர் விமல் ஜீகனகே வழக்குத் தொடர்ந்துள்ளார்.

உயர் நீதிமன்றில் தனது வழங்கறிஞர் டபிள்யூ வீரரத்ன மூலம் இந்த அடிப்படை மனித உரிமை வழக்கை அவர் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்ட போது, தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதி அரச கட்டுப்பாட்டு பகுதிகள் என்று இரு பிரிவுகளாகக் பிரிக்கப்பட்டன. தமிழீழ விடுதலைப்புலிகளின் பகுதியில் பொலிஸாரோ படையினரோ முன் அனுமதி பெற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் பகுதியில் சுதந்திரமானதேர்தலை - தேர்தல் ஆணையாளரால் நடத்த முடியாது, முறைகேடுகள் நடக்க வாய்ப்பு உள்ளது என்று தமது மனுவில் அவர் தெரிவித்துள்ளார்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி, நெல்சன் பெரேரா என்ற வேட்பாளரும் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# பொதுஇணக்கப்பாடு குறித்து ரணில் பேசுவது வேடிக்கை!

## கிண்டல் செய்கிறார் மங்கள



கொழும்பு

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பொது இணக்கப்பாடு எட்டப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தி வருவது, மிகவும் நகைச் சுவையாக இருப்பதாக அமைச்சர் மங்கள சமரவீர கிண்டல் செய்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் ஒருங்கிணைப்பாளரான மங்கள சமரவீர -

இரு கட்சிகளிடையே இணக்கப்பாட்டை உருவாக்க கடந்த 11 ஆண்டுகளாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சியையும் நிராகரித்த ரணில் விக்கிரமசிங்க- இப்போது பொது இணக்கப்பாடு குறித்து பேசுவது நல்ல நகைச்சுவையாக இருக்கிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் எமது அரசாங்கம் உறுதியான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளது. கடந்த 1997 ஆம் ஆண்டு அதிகாரப் பகிர்வுடன் கூடிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைத்தபோது ஐக்கிய தேசியக் கட்சி அதை சீர்குலைத்தது. அரசியல் யாப்புத்திருத்தம் தொடர்பான பேச்சுக்களையும் புறக்கணித்து ஐக்கிய தேசியக்கட்சி

கடந்த காலங்களில் எல்லாம் எமது இணக்கப்பாட்டுக் கோரிக்கைகளை நிராகரித்து வந்த ரணில் விக்கிரமசிங்க, இப்போது வேண்டுகோள் விடுத்து வருவது நல்ல நகைச்சுவையாகத் தான் இருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றவுடன், ஐக்கிய தேசியக்கட்சியின் புதிய தலைமையுடன் இணக்கப்பாட்டை மேற்கொள்வார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியை காப்பாற்ற ரணிலின் உதவியை சந்திரிகா குமாரதுங்க நாடியுள்ளதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் அனைவரும் மகிந்த ராஜபக்ஷவின் பின்னால் உள்ளனர். சுதந்திரக்கட்சியைப் பாதுகாக்க வேண்டுமெனில் - ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்துதான் கட்சியைப் பாதுகாக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அளிப்பதன் மூலம் நாட்டை கூறுபோட ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

# மிலேனியம் சிற்றியிலிருந்தது ஆழ ஊடுருவும் படையணியல்ல!

கொழும்பு

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் இராணுவப் புலனாய்வுத்துறையினரால் பேணப்பட்டுவந்த இரகசிய மறைவிடத்தில் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி இருக்கவில்லை என்றும் -

இவ்வாறான ஒரு அமைப்பை அம்பலப்படுத்திவிட்டதாக தெரிவித்தது மக்களின் அனுதாபத்தை பெறுவதற்கான முயற்சியே இது என்றும் ஐ.தே.கட்சியில் புதிதாக இணைந்துள்ள முன்னாள் இராணுவ அதிகாரியான கேணல் ஜயவீர பெர்னாண்டோ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். இவர் மேலும் தெரிவிக்கையில் -

மிலேனியம் சிற்றியில் இராணுவத்தின் துணைப் பிரிவொன்றினால் புலனாய்வுப் பிரிவொன்று தற்காலிகமாக நடத்தப்பட்டு வந்தது. ஆனால் இது ஆழ ஊடுருவித் தாக்கும் படைப் பிரிவென்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது. முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் தனது குளறுபடிகளை மூடிமறைக்கும் செயற்பாடாகவே இந்தப் பிரசாரத்தை மேற்கொண்டுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




வடமராட்சி போரூட் நிறுவனம் -அதன் திட்டக் கிராமங்களுக்கிடையே உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிரிக்கெட் போட்டிகளை நடத்தியுள்ளது.

இதில் உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தை வதிரி யங்லயன்ஸ் அணியும், இரண்டாம் இடத்தை துன்னாலை போதனாமடம் அணியும் -

கிரிக்கெட் போட்டியில் முதலாம் இடத்தை துன்னாலை மாதா கோவிலடி அணியும் இரண்டாம் இடத்தை கப்புது அந்தணர் திடல் அணியும் பெற்றுக் கொண்டன. (12)

# இந்தியாவுடனான 4 ஆவது போட்டி; ஜெயவர்த்தன விளையாடமாட்டார்!

## நவம்பர் 3 இல் கொழும்பில் திருமணம்



நாக்பூர் —

கிரிக்கெட் போட்டிகளில் கலக்கிவரும் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் மஹேல ஜயவர்த்தன (28) எதிர்வரும் 3 ஆம் திகதி கொழும்பில் தனது நீண்டகால காதலி கிறிஸ்டியானா சிறிசேனவை கைபிடிக்கவுள்ளார்.

இந்தியாவில் தற்போது நடைபெற்றுவரும் கிரிக்கெட் தொடரில் பங்கேற்றுவரும் ஜயவர்த்தன - திருமணத்துக்காக எதிர்வரும் 31ஆம் திகதி கொழும்பு திரும்புவார்.

இதனால் புனேயில் 3 ஆம் திகதி நடைபெறும் 4 ஆவது போட்டியில் அவர் விளையாடமாட்டார். அதேசமயம் அஹமதாபாத்தில் 6 ஆம் திகதி நடைபெறும் பகல் -இரவுப் போட்டியில் பங்கேற்பார் என இலங்கை அணியின் முகாமையாளர் மைக்கேல் திசெரா தெரிவித்தார்.


ஜயவர்த்தன கைபிடிக்கும் காதலி கிறிஸ்டியானா- கொழும்பில் சுற்றுலா ஆலோசகராக பணியாற்றி வருகிறார்.

கடந்த மார்ச்சில் ஜயவர்த்தன -கிறிஸ்டியானா சிறிசேன திருமண நிச்சயம் நடைபெற்றது. அப்போது நவம்பர் 3 இல் திருமணம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

ஆனால் இந்தியாவில் நடைபெறும் தொடர் அதற்கு இடையூறாக இருக்கும் என்பது அதன்பிறகே தெரியவந்துள்ளது.

இலங்கை அணியைத் தொடர்ந்து தென்னாபிரிக்கா இந்தியாவில் விளையாடுவதால் இலங்கையுடனான தொடர் சற்று முன்னதாக நடைபெறும்படி மாற்றியமைக்கப்பட்டது.

முன்னதாக திட்டமிட்டபடி நவம்பர் 7ஆம் திகதி இலங்கையுடனான தொடர் தொடங்குவதாக இருந்தது.



# இந்திய - இலங்கை அணிகள் இன்று மொகாலியில் மோதல்!

மொகாலி —

இந்திய - இலங்கை அணிகள் மோதும் - வீடியோ கோன் கிண்ணத்துக்கான ஒருநாள் போட்டித் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று மொகா லியில் பகல் - இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது. இரு அணிகள் இடையே 7 ஒரு நாள் போட்டி கொண்ட தொடர் நடை பெற்றுவருகிறது. இதில் நாக்பூரில் நடைபெற்ற முதலாது ஒருநாள் போட்டியில் இந்தியா 152 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

இந்த நிலையில் இந்திய - இலங்கை அணிகள் இடையேயான இரண்டா வது ஒருநாள் போட்டி இன்று மொகாலியில் நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் பங்கேற்பதற்காக இரு அணி வீரர்களும் நேற்றுமுன் தினமே மொகாலி சென்றுவிட்டனர். நேற்று அவர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். போட்டி நடைபெறும் மைதானம் மற்றும் வீரர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மைதானத்தின் அனைத்து வாயில் களிலும் குண்டுகளை கண்டுபிடிக்கும் கருவிகள் வைக்கப்பட்டுள்ளன. ரசிகர்கள் அனைவரும் பலத்த சோதனைக் குப் பின்னரே உள்ளே அனுமதிக்கப் படவுள்ளனர்.


முதல் ஆட்டத்தில் இந்திய அணி சிறப்பாக ஆடியது. துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் இலங்கையை பந் தாடியது. டெண்டுல்கரின் ஆட்டம் புத் துணர்ச்சி பெற்றுள்ளதால் இன்றைய ஆட்டம் மேலும் விறுவிறுப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதல் போட்டியில் பதான் மூன்றாவது வீரராகக் களமிறங்கியது நல்ல பலனை அளித்ததால் இன்றைய ஆட்டத்திலும் அவர் அதே இடத்தில் ஆடுவார்.

பந்துவீச்சில் ஹர்பஜன்சிங், முரளி கார்த்தக ஆகியோருடன் புதுமுக வீரர் ஸ்ரீசந்தும் முதல் போட்டியில் சிறப்பாக பந்து வீசினார். இதனால் இன்றைய ஆட்டத்தில் இந்திய அணியில் மாற்றமிருக்காது.

முதல் போட்டியில் இலங்கை அணி மோசமாக ஆடியதால் இன் றைய ஆட்டத்தில் அணியில் மாற்றங் கள் இடம்பெறும்.



# குரோன்ஞேவின் வாழ்க்கை திரைப்படமாகத் தயாரிப்பு!



டர்பன் —

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ஹான்சி குரோன்ஞேவின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக்கப்படவுள்ளது.

படத்துக்கான கதை தயாரிக்கும் பணி கடந்த வருடமே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. குரோன்ஞே வேடத்தில் நடிக்கப்போவது யார் என்பது இன்னும் முடிவாகவில்லை. சிலரை அடையாளம் கண்டுள்ளோம். ஆனால், ஒளிப்பதிவு தொடங்கும் சமயத்தில் யாரென்பது வெளியிடப்படும்.

குரோன்ஞே குறித்து சமீபத்தில் வெளியான சுய சரிதையைத் தழுவி திரைப்படம் இருக்காது. சற்று வித்தியாசமாக இருக்கும் என அவரது சகோதரர் பிரான்ஸ் குரோன்ஞே தெரிவித் தார்.


தென்னாபிரிக்கா மட்டுமல்லாது அவுஸ்ரேலியா, இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் அதற்கான படப்பிடிப்பை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

## விளையாட்டு

இரு ஆண்டுகளுக்கு முன்னர் விமான விபத்தில் உயிரிழந்த ஹான்சி குரோன்ஜே - அதே ஆண்டில் இந்தியத் தரகர்களுடன் சூதாட் டத்தில் ஈடுபட்டது உறுதியானதால் தென்னா பிரிக்க கிரிக்கெட் சபை அவருக்கு வாழ்நாள் தடையை விதித்திருந்ததும் தெரிந் ததே.

# பாகிஸ்தான் அணியுடனான தொடர் சவால் நிறைந்ததாகவே இருக்கும்!

## இங்கிலாந்து அணித் தலைவர் வோன்



இஸ்லாமாபாத் —

பாகிஸ்தானுக்கு எதிரான கிரிக்கெட் தொடர் சாவல் நிறைந்ததாக இருக்கும் என்று இங்கிலாந்து அணி கப்டன் மைக்கேல் வோன் தெரிவித்தார்.

பாகிஸ்தான் சுற்றுப்பயணம் குறித்து இங்கிலாந்து அணி கப்டன் மைக்கேல் வோன் இஸ்லா மாபாத்தில் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது-

பாகிஸ்தானில் தட்பவெப்ப நிலை மாறுபட்டு காணப்படும். எனவே, இந்தச் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் எங்கள் (இங்கிலாந்து) அணி வீரர்கள் மாறிக் கொள்வார்கள். பாகிஸ்தானில் வித்தியா சமான சூழ்நிலையில் ஆடுவதால் அந்த அணிக்கு எதிரான இந்தத் தொடர் சவாலாகவே இருக்கும்.

வீரர்கள் மாறுபட்ட தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. எனினும், சிறப்பாக ஆடி வெற்றி பெற முயற்சிப்போம். அவுஸ்ரேலியா வுக்கு எதிரான ஆஷஸ் தொடரின்போது வேகப்பந்து வீச்சாளர் சைமன் ஜோன் சின் பங்களிப்பு அதிகமாக இருந்தது. காயம் காரணமாக இந்தத் தொடரில் அவர் இடம்பெறாதது பெரிய இழப்பாகும். பாகிஸ்தானுக்கு எதிரான இந்தத் தொடரும் அடுத்து இந்தியாவுக்கு எதி ராக நடக்கவிருக்கும் தொடரும் இங்கிலாந்து அணி உலக தரவரிசை யில் முதலிடத்தைப் பிடிக்க ஏதுவாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் பயிற்சியாளராக அக்ரம் விருப்பம் தெரிவிப்பு!



லாகூர் —

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக அந்த அணியின் முன்னாள் கப்டன் வசிம் அக்ரம் விருப்பம் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனாக இருந்து ஓய்வுபெற்ற பின்னர் அக்ரம் தொலைக்காட்சி வர்ணனையாளராக பணியாற்றி வருகிறார்.

வேகப்பந்துவீச்சில் கைதேர்ந்தவரான அக்ரம், சுவிங் பந்து வீச்சின் சுல்தான் என்ற பெருமைக்குரியவர். அவர் தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக விருப்பம் தெரிவித்துள்ளார்.

லாகூரிலுள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியை பார்வையிட்ட பின்னர் வசிம் அக்ரம் நிருபர்களிடம் கூறியதாவது -

பயிற்சியாளர் நியமனம் தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடமிருந்து எனக்கு கடிதம் வந்துள்ளது. அதில் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பம் செய்பவர்கள் லெவல் 3 அல்லது லெவல் 4 பயிற்சி முடித்திருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் பாகிஸ்தான் அணிக்கு பயிற்சியளிக்க விரும்புகிறேன். ஆனால், இந்த வழியில் அல்ல. எனக்கு நீண்ட அனுபவம் இருக்கிறது. இதனால், என்னை கடிதத்துடன் சபை காத்திருக்க வைக்காது என எதிர்பார்க்கிறேன்.

104 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 414 விக்கெட்டுக்களையும் 356 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 502 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளேன். பயிற்சிப் படிப்பைவிட நான் ஆட்ட அனுபவத்தின் மூலம் அதிகம் கற்றிருப்பதாக நினைக்கிறேன்.

வலைப் பயிற்சியின்போது சொகைப் அக்தரை சந்தித்தேன். அவர் உடல் தகுதியு டன் உள்ளார். அத்தோடு சிறப்பாகச் செயற்பட ஆர்வமாக இருக்கிறார். அக்தர் பந்து வீசுவதற்காக அதிக தூரம் ஓடிவருவதைக் குறைத்தால் அவர் காயம் ஏற்படுவதை தவிர்க்க முடியும்.

ஆஷஸ் சாம்பியனான இங்கிலாந்து அணியை எதிர் கொள்ள பாகிஸ்தான் அணி மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் தகுதியாகவுள்ளது.

நாங்கள் ரிவர்ஸ் சுவிங் பந்து வீசியபோது இங்கிலாந்து பத்திரிகைகள் விமர்சித்தன. ஆனால், இப்போது இங்கிலாந்து வீரர்கள் அதனை வீசியதும் சரி என்கிறார்கள். எங்களை விமர்சித் ததற்காக இங்கி லாந்து பத்திரிகைகள் மன்னிப்பு கேட்கவேண்டும் என வசிம் அக்ரம் மேலும் கூறினார்.

# இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு பாரம்பரிய வரவேற்பு இல்லை!

இஸ்லாமாபாத் —

பாகிஸ்தானுடன் கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதற்காக இங்கிலாந்து அணி புதன்கிழமை இஸ்லாமாபாத் வந்த போதும், சமீபத்தில் நிகழ்ந்த பாரிய பூகம்பம் காரணமாக பாரம் பரிய வரவேற்பு அளிக்கப்பட வில்லை.

24 கொமாண்டோ படை யினர், 150 பொலிஸார் புடை சூழ விமான நிலையத்தில் இருந்து வீரர்கள் உடனடியாகத் தங்கு மிடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட னர்.

விமான நிலையத்தில் காத்திருந்த பத்திரிகையாளர்களிடம் வீரர்கள் பேசவில்லை. பிளின்ரொப், ஸ்ரீவ் ஹார்மிசன் ஆகியோர் அணியுடன் வரவில்லை. சுப்பர் தொடரில் பங்கேற்றதால், ஒரு வாரம் கழித்து நவம்பர் 3ஆம் திகதி அவர்கள் இஸ்லாமாபாத் வரவுள்ளனர்.

பாகிஸ்தானுடன் 3 டெஸ்ட் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகளில் இங்கிலாந்து விளையாடவுள்ளது. ராவல் பிண்டியில் 31ஆம் திகதி பெற்றன் லெவன் அணிக்கு எதிராக 3 நாள் பயிற்சி ஆட்டத்தில் பாகிஸ்தான் பயணத்தைத் தொடங்குகிறது இங்கிலாந்து.



முதல் டெஸ்ட் போட்டி முல்டானில் நவம்பர் 12ஆம் திகதி தொடங்கவுள்ளது. பைசலாபாத்தில் 2ஆவது டெஸ்டும், லாகூரில் 3ஆவது டெஸ்டும் நடைபெறும்.

# தொழில்நுட்ப உலகில் சவாலை சமாளிக்க
# அனைவருக்கும் கணினிக் கல்வி அவசியம்
## டிறிபேக் கல்லூரி அதிபர் அருந்தவபாலன்

சாவகச்சேரி

இன்றைய தொழில்நுட்ப உலகில் அனைவருக்கும் அத்தியாவசியமான ஒன்றாகக் கணினிக்கல்வி விளங்குகின்றது. அத்தகைய கணினிக்கல்வியைக் கற்று, வெளியேறி இன்று சான்றிதழ்கள் பெறும் நீங்கள் இத்தோடு நின்றுவிடாது நீங்கள் பெற்ற கல்வியறிவைப் பயன்படுத்தி, சுயமான முறையில் செயற்பட்டு முன்னேற வேண்டும். சான்றிதழைக் கையில் பெற்றவுடன் வேலை கிடைக்க வேண்டும் என எண்ணாது- அரச தொழிலை எதிர்பாராது, உங்கள் அறிவை ஏணியாகக் கொண்டு முன்னேற முயற்சிக்க வேண்டும் என, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபரும், தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவருமான க.அருந்தவபாலன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சாவகச்சேரியில் அமைந்துள்ள லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய இலவச கணினிப்பயிற்சி நிலையத்தின் ஆண்டு நிறைவு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சாவகச்சேரி டச்சுவீதியில் அமைந்துள்ள இந்த நிலையத்தில் யாழ்.இந்துக்கல்லூரி ஆசிரியர் கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஆசியுரையினை அகில இலங்கை சைவக்குருமார், அர்ச்சகர் சபைத்தலைவர் சிவஸ்ரீ. க.கிருபானந்தக்குருக்களும், வரவேற்பு உரையை பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த சசிகலாவும் நிகழ்த்தினர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

எதிர்காலம் கணினிமயமானது. அதற்கு ஏற்றவாறு எமது கணினி அறிவைப் பெருக்கிக் கொள்வதோடு மட்டும் நின்றுவிடாது, அதனைப் பயன்படுத்தவும் வேண்டும். நாளுக்கு நாள் கணினியில் புதுப்புது விடயங்கள் புகுத்தப்படுகின்றன. எனவே, பெற்ற கல்வியைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொண்டிருந்தாலேயே நாம் நிலைத்து நிற்க முடியும். இதற்கு எமக்குத் தடையாகவுள்ள ஆங்கிலக் கல்வியை நாம் விருத்தி செய்து கொள்ளல் வேண்டும். எமக்கு ஏதாவது ஒரு விடயத்தில் - ஆர்வமும், தேடலும் இருந்தால், நாம் நிச்சயமாக அதில் முன்னேறலாம்.

ஆகவே இளந்தலைமுறையினர் நிறைந்த ஆர்வத்துடன் தேடலில் ஈடுபட்டால், நிச்சயம் எதிர்கால தொழிலுலகத்துக்கு ஏற்ற முறையில் ஈடுகொடுத்து வாழ முடியும் எனவும் அவர் கூறினார். (24)

# மாகியப்பிட்டி கிராம மக்களுக்கு சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கல்

சுதுமலை

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு - ஐக்கிய நாடுகள் அபிவிருத்திட்ட நிறுவனம் சுயதொழில் முயற்சிக்கு கடன் வழங்கியுள்ளதாக கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஐ.மார்க் கண்டு தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தால் 2 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த நிதியைக் கொண்டு சங்க உறுப்பினர்களில் 20 பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிக்கான கடன் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஊடாகவே இந்த நிறுவனத்தால் நிதி வழங்கப்பட்டுள்ளதாகச் சங்கத் தலைவர் தெரிவித்தார். (91)

# சமூகக்கல்வி ஆக்கத்திறன் போட்டியும், கண்காட்சியும்

யாழ்ப்பாணம்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே சமூகக் கல்வி ஆக்கத்திறன் போட்டியும், கண்காட்சியும் நடைபெறவுள்ளதாக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் தெரிவித்தார்.

மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி வளாகத்தில் நாளை, வலயரீதியான ஆக்கத்திறன் போட்டியும் கண்காட்சியும் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் ஐந்து மாணவர்கள் கோட்டரீதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த மாணவர்களின் ஆக்கத்திறன் வெளிப்பாடே போட்டியாகவும் காண்காட்சியாகவும் நடத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (91)

# நவாலி கடற்தொழிலாளருக்கு தொழில் உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தால் நவாலி கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்குக் கடற்தொழில் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நிதி வழங்கியுள்ளதாகக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.தவரூபகுலசிங்கம் தெரிவித்தார்.

வள்ளம், மீன்பிடி இயந்திரம், மீன்பிடி உபகரணங்களை தொழிலாளர்கள் கொள்வனவு செய்ய, சங்கத்தின் ஊடாக கடன் வழங்குமாறு மேற்படி நிறுவனத்தால் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கடற்தொழிலாளர்களின் நிலைக்கேற்ப சுழற்சி முறையில் இந்தக் கடன் வழங்கப்படவுள்ளதாகவும், இந்த நிதி உதவியின் மூலமாக பல கடற்தொழிலாளர்கள் நன்மையடையவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (91)

# கருத்தரங்கு

வேலணை

வேலணை கல்விக் கோட்டப் பாடசாலைகளில் இயங்கிவரும் கட்டாயக் கல்விக் குழுவை வலுப்படுத்துவதற்கான கருத்தரங்கு எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வேலணைக் கோட்டத்துக்குட்பட்ட 21 கட்டாயக் கல்விக் குழுக்களையும் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு, தீவகக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் முன்பள்ளிகளின் இணைப்பாளருமான க.கணபதி தெரிவித்துள்ளார். (91)

# வாகன அடையாள அட்டை கண்டெடுப்பு

சாவகச்சேரி

வீதியில் கண்டெடுக்கப்பட்ட வாகன அடையாள அட்டை ஒன்று தென்மராட்சி பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

என்.பி.எம்.ஜி 4947 இலக்கமுடைய கைலாசபிள்ளை வீதி, சங்கத்தாணை, சாவகச்சேரியைச் சேர்ந்த யோகரட்ணம் நிரோஜன் என்பவரது மோட்டார் சைக்கிளுக்குரிய வாகன அடையாள அட்டையே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி நபரை நேரடியாக வந்து ஆதாரம் காட்டி, அதனை பெற்றுக் கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவினர் கேட்டுள்ளனர். (24)

# கலாசார பேரவைக்கு புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவைக்கான நிர்வாகத் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை செயலகத்தில் இடம் பெற்றது.

தலைவராக அரச அதிபர் கே.கணேஸ், செயலாளராக மெற்றாஸ்மெயில், பொருளாளராக ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதுடன் ஏனைய நிர்வாகிகளின் தெரிவும் இடம்பெற்றது. ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (111, 206)

# கட்டடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

பருத்தித்துறை

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், புதிய கட்டடத் திறப்பு விழாவும், நாளை பிற்பகல் 2.30 மணிக்குக் கல்லூரியின் அதிபர் இ.நடராசா தலைமையில் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடை பெறவுள்ளது.

இந்த விழாவின் விஞ்ஞான ஆய்வுகூடத்தினை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பாடசாலை வேலைப் பகுதிப் பணிப்பாளர் எ.வி.ஆண்டியப்பு திறந்துவைப்பதுடன், வெளிச்ச வீட்டினை வடமராட்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா திறந்து வைக்கவுள்ளார். (12)

# வேர்ல்ட் விஷன் நிறுவனத்தால் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன

சுதுமலை

சுனாமியால் பாதிக்கப்பட்ட வலிகாமம் மேற்கு பிரதேச மக்களுக்கு வேர்ல்ட் விஷன் நிறுவனம் 125 சைக்கிள்களை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் ஆண்களுக்கான 100 சைக்கிள்களும், பெண்களுக்கு 25 சைக்கிள்களும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்ராஸ் மேற்கொண்டு வருகிறார்.

பொன்னாலை, சுழிபுரம், மூளாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட வருமானம் குறைந்த குடும்பங்களுக்கே இவை அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது. (91)

# சரசாலை பொது நூலகத்தில் சிறுவர் பகுதி திறக்கப்படவுள்ளது

சாவகச்சேரி

சாவகச்சேரி பிரதேச சபையின் கீழுள்ள சரசாலை பொது நூலகத்தில் சிறுவர் பகுதி விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கென சுமார் 20 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. மேற்படி நூலக அபிவிருத்திச் சபையினர் பொது மக்களிடம் இருந்து நூல்களையும், நிதியையும் சேகரித்து வருகின்றனர்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாகவே இந்த முயற்சி எடுக்கப்படுவதாக மேற்படி நூலக நூலகர் தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாது, 6 ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்களிடையே பொது அறிவுப் போட்டியும் நூலகத்தால் நடத்தப்பட்டுள்ளது.

இதில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்கள்- சிறுவர் பகுதி திறந்துவைக்கப்படும் தினத்தில் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

# எயிட்ஸ் தடுப்பு தினத்தை அனுஷ்டிக்க விரிவான ஏற்பாடு

யாழ்ப்பாணம்

சர்வதேச ரீதியாக டிசம்பர் 1 ஆம் திகதி அநுஷ்டிக்கப்படும் சர்வதேச எயிட்ஸ் தடுப்பு தினத்தை - யாழ்.மாவட்டத்திலும் சிறப்பான முறையில் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான கூட்டம், கடந்த திங்கட்கிழமை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் அவரது அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் - யு.என்.எச்.சி.ஆர்., யுனிசெவ், ரி.ஆர்.ஆர்.ஒ., சுகவாழ்வுக்கான பயணங்கள் நிறுவனப் பிரதிநிதிகள் பங்குபற்றினர். எயிட்ஸ் தடுப்பு தினத்தை முன்னிட்டு பல கலை நிகழ்வுகள், போட்டிகள், பொதுநிகழ்வு என்பன ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (111)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : த.சுஜீவதாஸ்
முகவரி : கரம்பொன்.

அகவை மூன்று



பெயர் : பா.கிருஷ்ணவாணி
முகவரி : கொடிகாமம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு :
கூப்பன்களும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்



# சைவத் திருமுறை விழா

யாழ்ப்பாணம்

வருடம் தோறும் நடைபெற்றுவரும் உடுவில் கோட்ட சைவத்திருமுறை விழா எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தெரிவித்துள்ளார்.

போட்டிகள் யாவும் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக நடத்தப்படவுள்ளது. சைவசமயத் தொண்டுகளின் செயன்முறை, நீதிச் செய்யுள் மனன முற்றோதல், திருமுறைப் பண்ணிசை, கதாப்பிரசங்கம், புராணபடனம் போன்ற பல போட்டிகள் நடைபெறவுள்ளது. புராணபடனம், கதாப்பிரசங்கம், சைவசமய அறிவு வினா விடைப் போட்டி என்பன திறந்த நிலைப் போட்டிகளாக நடைபெறவுள்ளது.

சைவத் திருமுறை விழா தொடர்பாக பாடசாலை மாணவர்களிடையே போட்டிகளை நடத்தி, முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவர்களின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் அதிபர்களைக் கேட்டுள்ளார். (91)

# மாவீரர் தினத்தையொட்டி நடத்தப்படும் கவிதைப் போட்டி

யாழ்ப்பாணம்

நவம்பர் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் தினத்தையொட்டி, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடத்தப்படவுள்ள கவிதைப் போட்டிக்குப் படைப்பாளிகளிடமிருந்து படைப்புக்கள் கோரப்பட்டுள்ளன.

கவிதைகள் யாவும் தேசவிடுதலையை மையமாகக் கொண்டு ஆக்கப்பட வேண்டும். 30 வரிகளுக்கு குறையாமல் 40 வரிகளுக்கு மேற்படாமல் படைப்புகள் அமைய வேண்டும். வயது வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

கவிதைகள் யாவும் 15.11. 2005 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, கவிதைப் போட்டி - 2005, தலைமைச் செயலகம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

வெற்றியீட்டும் படைப்பாளிகளுக்கு பெறுமதிவாய்ந்த பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும் எனப் பேரவை இணைப்பாளர் அறிவித்துள்ளார்.




# மகளிர் உரிமைகள் மனித உரிமைகளே...!

(சென்றவாரத் தொடர்ச்சி...)

உயிர் வாழ்தல் தொடர்பான பாரிய பிரச்சினைகளுக்குப் பின்னாலேயே அது வரவேண்டும். அதாவது- மகளிர் பிரச்சினைகளில், பால் ரீதியாகப் பாரபட்சம் காட்டப்படுவது உண்மையாயிருந்தும், அது ஒரு பாரிய பிரச்சினையே அல்ல எனத்தட்டிக் கழிக்கப்படுகிறது. பெண்கள் மீதான துஷ்பிரயோகங்கள் மன வருத்தத்துக் குரியவைதான். எனினும் அவை கலாசார, தனிப்பட்ட ...ிபர் பிரச்சினையே ஒழிய, தமக்கென்ன எனும் போக்கிலும், தீர்பில்லாத அநியாயத்தின் விலைகளும் அங்கீகரிக்கப்படுகின்றன. எந்தவொரு நிறுவனமும் பெண்களது உரிமைகளைக் கவனத்தில் கொள்ளாததற்குப் பல காரணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

பெண்கள் மீதான துஷ்பிரயோகம் அங்கீகரிக்கப்படும் அதேவேளையில், அது தவிர்க்க முடியாதது என்றோ, அது பற்றிக் கவனம் செலுத்துவது ஏனைய மனித உரிமைப் பிரச்சினைகளை மேவிவிடும் என்றோ கூறப்படும். இவ்வாறான காரணங்களைக் காட்டியே மகளிர் உரிமைகளை மனித உரிமைகளாக அங்கீகரிக்காத ஒரு நிலை ஏற்படுத்தப்பட்டு நியாயப் படுத்தப்படும்.

மகளிர் உரிமைகளை, மனித உரிமைகளாகக் கொள்ளும் வகையில் பால் ரீதியான பாரபட்சங்களை நீக்குவதற்கு புதிய சட்டரீதியான வழிவகைகளை உருவாக்குதல் என்பது முக்கியமானதொரு செயற்பாடாக அமைக்கப்படுமா? என்பதே கேள்வியாகிறது. மெலியாரை வலியார் தாக்குகின்றோம் என்னும் பரிகசிப்பில், பாதிக்கப்பட்ட பெண்ணைத் துன்பியலுக்கு உட்படுத்துவதில் ஆண்கள் மட்டுமன்றி, பெண்களும் பங்கு பற்றுகின்றனர். இம்சித்தல் என்பது இவர்கள் வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றது. பெண்களின் உணர்வுகளை மதிக்காமல், அதற்குப் பல்வேறு அர்த்தங்கள் தமக்கேற்ற விதங்களில் புரியப்பட்டு, புரிந்துணர்வு, உரையாடல் இல்லாத வெறும் வெற்றுக் குணங்களையும், இடங்களையும் நிலை நிறுத்துவதுகூட தொடர்கதையாகிவிட்டது.



- மாதுங்கி -

பெண்களது வாழ்க்கை ஒரு கைப் பொம்மையா? தொடர்பில்லாத கைங்கரியங்கள் பெண்ணின் வாழ்வை நிர்மூலமாக்குவதற்கு களம் அமைத்துக் கொடுப்பவர்கள் யார்? தனது உரிமைக்காக குரல் கொடுத்த எந்தப் பெண்ணாவது வாழ்ந்தாளா? இல்லையேல் வாழத்தான் விட்டார்களா? வாழ்த்தான் வேண்டுமெனில், வாழ்வு என்ன லேசானதோ? எனும் கேள்விகளுக்கு யார் பதிலளிப்பர். அவளது உணர்வுகளை மழுங்கடிக்கும் தேவைக்குதவாத கணிப்பீடுகளும், மதிப்பீடுகளும் தத்தம் தவறுகளைப் பிறர் மேல் சாய்ப்பதற்காக எழுந்தவை. அவள் சதா தவறிழைத்தவளாக சித்தரிக்கப்பட்டு, பயணக் கைதியாக உருவாக்கப்படுகின்றாள். புனைகதைகளால் அலங்கரிக்கப்படுகின்றாள். அவள் உடைந்து நொருங்குவதற்கு காரணமாகிப்போன பல மனிதர்கள் நிறைவானவர்களாக வாழக் கூடும். இந்த நிலைமைகளில் கூட அவளைத் திருப்பிக் கேட்கிறது சமுதாயம். அவர்கள் எப்படியும் நன்றே வாழட்டும். ஆனால், நீ வாழக் கூடாது. நீ அடிமை. ஏனெனில், நீதான் தவறு இழைத்தவள். எவ்வளவு கொடுமைகள், முரண்பாடான நிகழ்வுகளின் சங்கமம். நகைச்சுவைகள் ஒரு போதும் ஒரு மனிதனைத் துன்புறுத்துவதற்குப் பயன்படக் கூடாது.

எனவே ஆரம்ப காலப் பெண்ணிலைவாத அமைப்பு ஒன்று கூறியதுபோல 'எமக்கு உணவு மாத்திரமல்ல பூக்களும் தேவையாகும்' இங்கு பூக்கள் என்பது சம்பிரதாய பூர்வமான கலாசாரப் பின்னணியில் பெண்களுக்குத் தலையில் சூட்ட, கணவனால் வாங்கி கொடுக்கப்படும் பூக்கள் என்பதல்ல, மாறாகப் பெண்களுக்கு சுதந்திரம் வேண்டும். வன்முறை, அடக்குமுறை ஆகியவை அற்றுப் போலி வதந்திக்குட்படாத ஒரு சமுதாயம் வேண்டும். இந்த நிலையில் கௌரவமான வாழ்க்கையை வாழக்கூடிய சாத்தியப்பாடும் தேவை. இத்தகைய போராட்டத்தில் மகளிர் உரிமைகள் மனித உரிமைகளாக அங்கீகரிக்கப்படுவது ஒரு முக்கியமான பங்கை வழங்க முடியும். எனவே மகளிர் உரிமைகளும் மனித உரிமைகளாக அங்கீகரிக் கப்படுவது அவசியமாகும். ********

## நகத்தில் தெரியுமே தேக ஆரோக்கியம்



அகத்தின் அழகை முகம் காட்டுவது மாதிரி நம் உடலின் ஆரோக்கிய நிலையை நகம் காட்டும் என்று சொல்லி வியப்பூட்டுகிறார்கள் மருத்துவர்கள்.

பழங்காலத்தில் நாடியைப் பிடித்தும், நகங்களைப் பார்த்தும்தான் நோய்களைக் கண்டறிந்திருக்கிறார்கள். உடலின் நல்லது கெட்டதுகளை உங்கள் நகங்களைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம்.

நகங்கள் இளஞ்சிவப்பு நிறத்தில் இருந்தால், நீங்கள் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள் என்று அர்த்தம். நகங்கள் வெளிறிப் போய் வெள்ளையாக இருந்தால் கல்லீரலில் ஏதோ பாதிப்பு இருக்கிறது.

சிறுநீரக செயலிழப்பு இருக்குமேயானால் நகங்களின் வளர்ச்சி அப்படியே குறையத் தொடங்கி, வெண்மைபாதி, சிவப்புபாதி என்று நிறம் மாறத் தொடங்கும்.

நகங்கள் இப்படி நிறம் மாறத் தொடங்கினால், உடனடியாக இதய சம்பந்தமான மருத்துவரை அணுக வேண்டும். இரத்தத்தில் போதுமான அளவு ஒட்சிசன் இல்லாவிடில், நகங்கள் நீலமாகிவிடும் என்று எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள். நிறத்தை மட்டுமல்ல... நகங்களின் அமைப்பை வைத்தும் உடல் நிலையைக் கணிக்க முடியும் என்கிறார்கள்.

நாள்பட்ட நுரையீரல் மற்றும் இதயநோய் உள்ளவர்களின் நகங்கள் கிளிமூக்குபோல் வளைந் திருக்கும். நகங்கள் வெளுத்து குழிபோல இருந்தால் இரத்தசோகை இருக்கிறது என்பது அர்த்தம்.

உடலில் இனிப்பின் அளவு அதிகமாகவும், புரதம் குறைவாகவும் இருந்தால் நகத்தில் வெண்திட்டுகள் உண்டாகும்.

நகங்களில் சிறு சிறு குழிகள் உண்டாகி, அவற்றில் வெடிப்பு ஏற்பட்டு, செதில் செதிலாக உதிர்ந்தால் "சோரியாஸிஸ்" என்ற தோல் நோய் வரப் போகிறது என்று அர்த்தம்... இந்த நிலையிலேயே சிகிச்சை எடுத்தால் சோரியாஸிஸைத் தடுக்கமுடியும்.

கர்ப்ப காலத்தில் நகங்கள் வெண்மையானால், கருப்பையின் ஈரத்தன்மையும் இரும்புச் சத்தும் குறைகிறது என்று அர்த்தம்.

# முயற்சியும், பயிற்சியும் இசை கற்கும் எவரிடமும் கட்டாயம் இருக்கவேண்டும்

யாழ்.குடாநாட்டின் வடபால் அமைந்துள்ள நிலவளம், கலைவளம் என்பவற்றுடன் அழகும் நிறைந்துள்ளது அளவெட்டி என்னும் கிராமத்தில்.

காலத்துக்குக் காலம் இசைக்கலைக்கு வளமும் நலமும் சேர்ப்பதற்காகக் கலைஞர்களைத் தோற்றுவித்து உதவுவது ஒரு வழக்கமான நிகழ்வாகும்.

அந்த நியதிக்கமைவாக அளவெட்டியில் தோற்றம் பெற்றுத் தண்ணிய குரலால் இன்னிசை வளர்க்கும் பணியிலீடுபட்டுள்ளவரே கனகாம்பரி சிவனேஸ்வரநாதன்.

இவர் அளவையூர் நாதஸ்வரச் சக்கரவர்த்தி கலாசூரி அமரர் என்.கே.பத்மநாதனின் திருமகள் என்பது ரசிகர்களான உங்களுக்கு மட்டுமே சொல்லி வைக்கும் பரமரகசியமாகும்.

இவரைக் கண்டு கலந்துரையாடி அவரின் இசைத் தொண்டு பற்றி விபரம் அறிந்து அதனைச் சங்கீத ரசிகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் பெருநோக்கோடு - பொது நோக்கோடு - அவர் இப்போது வாசம் செய்யும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி கில்னர் ஒழுங்கையில் இருக்கும் 199/4 ஆம் இலக்க இல்லத்துக்குச் சென்றிருந்தோம்.

கனகாம்பரி சிவநேஸ்வரநாதன் தனது வரலாறு பற்றிக் கூறுகையில் -

அளவெட்டி என்னும் கலைவளம் நிறைந்த அழகிய ஊரில் 06.01.1965 ஆம் ஆண்டு பிறந்தேன். நாதஸ்வரச் சக்கரவர்த்தி என்று இசைக்கலைஞர்களாலும், இசைச் சுவைஞர்களாலும் போற்றிப் புகழப்படும் அமரர் என்.கே.பத்மநாதன் எனது தந்தையார் என்று கூறிக்கொள்ளப் பெற்றபேறு எனது தவப்பயனே! இவரது ஊரும் அளவெட்டியே. எனது தாயார் நாகேஸ்வரி. இவரின் தந்தையார் நடராசா இவருமொரு தவில் வித்துவான். இவரின் சொந்த இடம் நயினாதீவு!

நான் உட்பட எனது தந்தையாருக்கு ஏழுபிள்ளைகள். நால்வர் ஆண்கள். மூவர் பெண்கள். நான் ஐந்தாவதுபிள்ளை.

எனது தந்தையாரின் தொழில் காரணமாக யாழ்ப்பாணத்தில் கில்னர் ஒழுங்கையில் இருக்கும் செட்டித்தெரு மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் எனது ஆரம்பக் கல்வியைக் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

பின்னர் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியிலும், அதன் பின்பு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் எனது உயர் கல்வியைக் கற்றுத் தேர்ச்சியடையும் வாய்ப்புக் கிடைத்தது. க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் சித்தியடைந்துள்ளேன்.

நான் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் படிக்கும் போதுதான் ஆரம்ப இசைக் கல்வியைக் கற்கத் தொடங்கினேன். அப்போது அங்கு இசை ஆசிரியையாகப் பணியாற்றிய சரஸ்வதி அவர்கள் எனது முதல் இசை ஆசிரியராவர்.

வீட்டில் எனது தந்தையாரிடம் இசை பயின்று வந்தேன். அத்துடன், அளவெட்டியில் வசித்து வந்த சங்கீதவித்துவான் குமாரசுந்தரம் வதனி அவர்களிடமும், தெல்லிப்பளையைச் சேர்ந்த சங்கீத வித்துவான் விசுவநாத ஐயாவிடமும் இசை பயின்று எனது இசை ஞானத்தை வளர்த்துக் கொள்ளும் பெருவாய்ப்புக் கிடைத்தது.

எனது பெற்றோரின் விருப்பப்படியே தமிழ்நாடு அடையாறு இசைக் கல்லூரியில் - 1983 ஆம் ஆண்டு தொடக்கம் 1986 ஆம் ஆண்டுவரை இசை பயின்றேன். கல்லூரியில் கற்றுவந்ததுடன் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இசைமேதைகளான ரி.எம்.தியாகராஜன், அனந்தலட்சுமி உபேந்திரன், சீத்தாராமையா ஆகியோரிடமும் இசை பயின்று, எனது இசை ஞானத்தை வளர்த்துக் கொள்ளும் அரிய வாய்ப்பு - பெரும்பேறு கிடைத்தென்றால் அது எனது தவப்பயனே! இசைக் கலைமணி என்னும் பட்டத்துடன் தாயகம் மீண்டேன்.

அத்துடன், யாழ்.கல்வித் திணைக்களத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற வட இலங்கை சங்கீத சபையின் ஆறாம் தரப்பரீட்சையில் (ஆசிரியர் தரம் ) தோற்றிச் சித்தி பெற்றுள்ளேன்.

எனது அரங்கேற்றம் 1989 ஆம் ஆண்டு நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் சிறப்புற நடந்தேறியமை இன்றும் பசுமையான நினைவாக உள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு இலக்கிய கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைமையேற்றிருந்தார்கள். பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்திருந்தார்கள். இந்த விழாவுக்குக் கலைஞர்களும், சுவைஞர்களும் பெருந்திரளாக வந்திருந்து நிகழ்வைக் கேட்டு மகிழ்ந்து பராட்டியமை நினைவில் நிற்கும் இனிய நிகழ்வாகும்.



1991 ஆம் ஆண்டு தொடக்கம் 1998 ஆம் ஆண்டுவரை, யாழ். பல்கலைக்கழகத்தின் இசைத்துறைப் பிரிவான, இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் வாய்ப்பாட்டுக்கான விரிவுரையாளராகப் பணியாற்றினினேன். (தொடரும்...)

# சுனாமி — ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

(30 ஆம் அத்தியாயம்)

மழை கொட்டிக்கொண்டிருந்தது. கமலம்மாவுக்கு நித்திரை வரவில்லை. இரவுச் சாப்பாடு எல்லோரும் சாப்பிட்ட பிறகு அடுப்பை மெழுகிவிட்டு, அவ படுக்க வரும் போது, வாத்தியார் கட்டில்லில் எழும்பியிருந்தார். பிள்ளையளும், கூட வந்தவரும் மண்டபத்துள் நல்ல நித்திரை. வாத்தியார் கூப்பிட்டார்.

கமலம்!... ம்!... கமலம்!...

அவருடைய குரல் கமறிப் போயிருந்தது. கமலம் எழும்பி இருக்கும் வாத்தியாருக்குக் கிட்டப் போனா. வாத்தியாருடைய கண்கள் இரண்டும் சிவந்திருந்தன. கிட்டப் போய் வாத்தியாருடைய நெற்றியைத் தொட்டுப் பார்த்தா. நெருப்புத்தணல் போல இருந்தது அவ பதறிப்போனா!...

'நல்ல காய்ச்சல் காயுது!... ராத்திரி மரவள்ளிக் கிழங்கு தின்ன வேண்டாமெண்டு சொன்னன்! கேட்டியளே!...'

அவவின் குரலில் ஒரு எரிச்சல்!... தொய்வு வியாதி இருப்பதால் வாத்தியார் உணவில் கட்டுப்பாடு அதிகம். ஆனால் ஆரும் வந்தால் வாத்தியார் சின்னப்பிள்ளையள் போல மாறிவிடுவார். முந்தியும் ஒரு நாள் இப்படித்தான் இரவு கருத்தக் கொழும்பான் மாம்பழத்தைச் சாப்பிட்டு விட்டு அவர் பட்டபாடு! மூண்டு நாள் ஆஸ்பத்திரியில கிடந்து... அவலப்பட்டவர்!... கமலம்மா யோசித்துக் கொண்டேகேட்டா!...

'ராத்திரி தொய்வு மருந்து போட்டனியளே!'

'இல்லை!... நான்!... மறந்து போனன்!...'

'சரி!... கொஞ்சம் பொறுங்கோ கொண்டு வாறன்!'

கமலம் கைவிளக்கைக் கொளுத்திக் கொண்டு அடுக்களைக்குப் போனா. அடுப்பில பானையில் இருந்த சுடுதண்ணியை மூக்குப்பேணியில விட்டுக் கொண்டு வாத்தியாற்றை தொய்வுக் குளிசையை எடுத்துப் பொடியாக்கினா. அந்தப் பொடியை வாத்தியாற்றை வாயுள் போட்டு சுடுதண்ணியையும் கொடுத்தா. அவர் தண்ணியை வாங்கிக் குடித்தார்.

தொண்டையை ஒரு முறை செருமினார்!.

'கமலம்!... தலை இடிக்குது!...'

அவர் குரல் அடைத்திருந்தது. அவவுக்கு அவரைப் பார்க்கப் பாவமாயிருந்தது.

'கொஞ்சம் பொறுங்கோ வாறன்!' என்று சொல்லிவிட்டு மீண்டும் அடுப்படிக்கு வந்தா. இடிச்சு வைச்சிருந்த வேர்க்கொம்புத்தூளை எடுத்து அம்மியில் வைத்து அரைத்துக் குழம்பாக்கினா. அதைக் கொண்டு போய் வாத்தியாற்றை நெற்றியில சந்தனம் பூசுவதுபோல நிறையப் பூசி விட்டா. வேர்க்கொம்பின் வாசம் மூக்கைத் துளைக்க வாத்தியார் ஒருமுறை தும்மினார். கமலம் பூசின வேர்க்கொம்புப் பசைக்கு மேல் ஒரு வெள்ளைச் சீலையை ஒட்டிவிட்டா. அவருடைய போர்வையை எடுத்துப் போர்த்து விட்டா. வாத்தியார் கண்ணை மூடிக் கொண்டு சொன்னார்!.

'இப்ப கொஞ்சம் சுகமாகக் கிடக்கு!... கமலம் நீ போய்ப்படு!'

'சரி நான் படுக்கிறன்!... நீங்கள் நித்திரை கொள்ளுங்கோ!'

சொல்லிவிட்டுத் திரும்பிய கமலத்தின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. அறை வாசலில் கண்ணைக் கசக்கிக் கொண்டு சங்கர் நின்றான்!...

'என்ன தம்பி நித்திரை குழம்பிப் போச்சே!'

'இல்லையம்மா!... ஐயா தும்பின சத்தம் கேட்டு முழிச்சிட்டன்! தண்ணி விடாய்க்குது!... கொஞ்சம் தண்ணி வேணும்!'

'சரி வா!... தாறன்!'

இருவருமாய் அடுக்களைக்கு மீண்டும் போனார்கள். சங்கருக்குத் தண்ணீரைக் கமலம்மா மூக்குப் பேணியில் கொடுக்கும்போதே சொன்னா!.

'தம்பி! நீ வாய்வைச்சுக் குடிக்கலாம்!...'

ஆனால் சங்கர் மூக்குப் பேணியால் முறையாகத் தண்ணீரைக் குடித்தான்!

'எட! கெட்டிக்காறன்! ஒரு நாளிலை பழகி விட்டாய்!'

கமலம்மா பாராட்டினாள். அவன் முகம் மகிழ்சியால் மலர்ந்தது. மூக்குப் பேணியை மேடையில் வைத்து விட்டு



நின்றான்! 'நீ போய்ப் படு ராசா!'

'அம்மா நீங்கள் தனிய இருக்கிறியள்!'

கமலம் அவனை வியப்புடன் பார்த்தாள். அவளுடைய நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று கரைவது போல இருந்தது.

'எனக்குப் பயமில்லை! நீபோய்ப்படு!'

கமலம்மா சொல்ல சுவர் மணிக்கூடு அடிக்கத்தொடங்கியது. சங்கர் எண்ணினான்! 11 முறை அடித்து ஓய்ந்தது. வாத்தியார் திரும்பவும் கூப்பிட்டார்.

கமலம்!... கமலம்!...

கமலம்மாவும் சங்கரும் வாத்தியார் படுத்திருந்த அறைக்குள் போனார்கள்

'கமலம் எனக்கு வேர்க்குது!...'

சின்னப்பிள்ளை போல அவர் முறையிட்டார்.

'தண்ணி விடாய்க்குது!'

கமலம் அவருடைய போர்வையை எடுத்தாள். உடம்பெல்லாம் வேர்த்திருந்தது. துவாயை எடுத்து அவருடைய உடம்பைத் துடைத்தாள்.

'கமலம்!... என்னைக் கொஞ்சம் எழுப்பி விடு!...'

வாத்தியார் சொல்லி முடிய இரண்டு பிஞ்சுக்கைகள் அவருடைய தோளைத் தொட்டன. அந்த சுகம்!... வாத்தியார் அறியாதது!. கமலம்மாவும் சங்கருமாக அவரை எழுப்பி இருத்தினர். சங்கர் இன்னொரு துண்டு எடுத்து அவருடைய முதுகைத்துடைத்து விட்டான். அந்தக் கைகளின் மிதமான வேகம் வாத்தியாருக்கு மலர்ச்செண்டால் தடவுவது போன்ற மகிழ்வைக் கொடுத்தது.,

'ஆ!... என்ன அற்புதமான சுகம்!...'

வாத்தியார் நெஞ்சுக்குள்ளும் ஏதோ கரைவது போல இருந்தது. சங்கரின் கைகளைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக் கொண்டார். அவனுக்கு வெட்கமாக இருந்தது! தன் கைகளை மெதுவாக அவரிடமிருந்து விடுவித்துக் கொண்டான். வாத்தியாருடைய முகம் இப்போது தெளிவாக இருந்தது. கமலம்மா அவருடைய முகத்தையும் கழுத்தையும் துடைத்தாள்.

சங்கர் அடுப்படிக்குப் போய் பெரிய மூக்குப் பேணியில் சுடுதண்ணீர் எடுத்து வந்து கமலம்மாவிடம்நீட்டினான்.

'நல்ல பிள்ளையடா! சமயம் அறிஞ்சு உதவி செய்கிறாய்!'

கமலம்மா இரண்டாவது முறை பாராட்டினா! சங்கருக்குத் திடீரென அம்மாவின் நினைவு வந்தது.

நெஞ்சுக்குள் பந்து போல ஏதோ வந்து அடைத்தது. கண்ணில் நீர் கரை தட்டியது. வாத்தியார் இதைக் கவனித்து விட்டார். எத்தனையோ ஆயிரம் மாணவர்களின் உள்ளத்தை அறிந்த அவருக்குச் சங்கரின் வேதனை புரிந்து.

'இஞ்சை வா! ராசா! ... எனக்குப் பக்கத்திலை இரு!'

வாத்தியாரின் அழைப்பை அவன் தட்டவில்லை. உடனே அவருக்குப் பக்கத்தில் போய் கட்டிலில் இருந்தான். அவர் தலையை அன்போடு தடவிக் கொண்டே சொன்னார்.

'நான் உன்ரை அம்மாவைக் கெதியாத் தேடித்தாறன்!'

கமலம்மாவும் இப்ப கிட்ட வந்து சொன்னா!

'ராசா!... எனக்கும் உன்ரை அம்மாவைப் பார்க்கவேணும் போலை இருக்கு'

வாத்தியார் சங்கரைப் பார்த்து ஒரு சின்னச் சிரிப்புப் பார்வையுடன் சொன்னார்.

'உவவுக்கும் உன்ரை அம்மாவிலை ஆசை வந்திட்டுது!

அது சரி உன்ரை அம்மா ஆரைப் போல இருப்பா!' 'உதென்ன விசர்க்கேள்வி கேக்கிறியள்!' கமலம்மா கொஞ்சம் எரிச்சலோடு சொன்னா! அப்போது சங்கர் சொன்னான்!

'சரியா!.. இந்த அம்மாவைப் போல இருப்பா!... ஆனால் வயது குறைவு!... எங்கடை அம்மா நல்லவடிவு!' கமலம்மாவுக்குக் கொஞ்சம் வெக்கமாயிருந்தது. வாத்தியார் அவளைப் பார்த்த பார்வையில் ஒரு முப்பது வருஷத்துக்கு முந்திய பார்வை நினைவுக்கு வந்தது.

'எட ! நீயும் நல்ல பகிடி! விடுகிறாய்!' என்று கமலம்மா சொன்னாலும் மனதில் சந்தோஷமாயிருந்தது.

'உன்னட்டை உன்ரை அம்மாவின்ரை படம் ஏதும் இருக்கே!' வாத்தியார் கேட்ட போது சங்கர் சொன்னான்!.

'என்ரை புத்தகப் பைக்கை கிடக்குது...! எடுத்துக் கொண்டு வாறன்!' அவன் துள்ளிக் கொண்டு மண்டபத்துக்கு ஓடினான்! தனது ஒரே சொத்தான அந்தப் புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு வாத்தியார் இருந்த அறைக்குள் வந்தான். பையினுள் கிடந்த புத்தகங்களை வெளியே எடுத்தான். கணக்குப் புத்தகத்தை ஆவலுடன் எடுத்து விரித்தான்!...

'ஐயோ!... அம்மாவின்ரை பட்த்தைக் காணவில்லை!'

அவன் மனம் ஏங்கிப் போயிற்று. அந்தப் படம் அவன் அம்மாவுக்கே தெரியாமல் களவாக எடுத்து வைத்திருந்த படம்!.. அம்மாவும் அப்பாவும் சங்கர் பிறக்க முன் எடுத்த படம்!... அதை அவன் பள்ளிக்கூடம் போனபோது புத்தகப் பையினுள் எடுத்து வைத்தது. பிறகு மேரி ரீச்சரிடம் ஒரு முறை காட்டிவிட்டு!... பிறகு...பாதரிடம் காட்டியது!... பாதரிடமிருந்து திரும்ப அந்தப் படத்தை வாங்கவில்லை!... இப்ப என்ன செய்யிறது.!

'என்ன சங்கர் படம் இல்லையா!... வடிவா வேறை புத்தகத்துக்கை தேடிப் பார்!'

'நான் அதைப் பாதரிடம் குடுத்தனான்!... அவர் திரும்பித்தரவில்லை!'

சங்கர் இப்ப அழத் தொடங்கி விட்டான்.

'அழாதை ராசா!... காலமை பாதரிட்டைப் போய்க் கேட்டு வாங்கலாம்!' கமலம்மா அவனுடைய புத்தகங்களைப் பையுள் வைத்துக் கொண்டு தேறுதல் சொன்னாள். அவன் விம்மினான். 'கமலம் அவன் இஞ்சை படுக்கட்டும்!...'

வாத்தியார் குரலிலும் வருத்தம் தெரிந்தது. கமலம்மா தன் பாயைக் கட்டிலுக்கு அருகில்விரித்தாள். சங்கரை அதில் படுக்க வைத்து தானும் அருகில் அவனை அணைத்தபடி படுத்தாள். சங்கரோ தேம்பியபடி ... கமலம்மாவைக் கேட்டான்!...

'எங்கடை அம்மாவை எப்பிடித் தேடுறது!'

(தொடரும்...)

# குழந்தை பிறந்ததும் தாய்க்கு தடைகள் போடுவது தவறு



(சென்றவாரத்தொடர்ச்சி...)

காரணம் - அவர்களுக்குத் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் இந்தச் சமயத்தில் அதிகப்படியாக ஏற்படும். அதனால் அவர்களை மருத்துவரின் கண்காணிப்பில் வைத்திருப்பதுதான் நல்லது. சில சமயம் ஆவேசத்தின் உச்சியில் இந்தப் பெண்கள் தங்களையும் அறியாமல் குழந்தையைக் கொன்றுவிடும் அளவுக்கே கூடச் செல்வார்கள்! மனநல மருத்துவரிடம் இவர்களை அழைத்துச் சென்று, சிகிச்சை கொடுத்துவர மெதுவாகக் குணம் அடையும். சிகிச்சையின்போது இவர்களுக்கு மருந்துகள் கொடுக்க வேண்டிவரும்போது, சில சமயம் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதைக்கூட நிறுத்த வேண்டி வரலாம்.

குழந்தை பிறந்ததும் பெண்களுக்கு இது போன்ற மனரீதியான மாறுதல்கள் ஏற்படுவதோடு, வெளித்தோற்றத்திலும் பல மாற்றங்கள் ஏற்படலாம். நிறையப் பேருக்கு தலைமுடி கொட்டும் பிரச்சினை. இது சாதாரண விடயம் தான்.

கர்ப்பகாலத்தில் நம்முடைய உடலில் ஓமோன்களின் செயற்பாடுகள் சற்றே அதிகப்படியாக இருக்கும். அந்தச் சமயத்தில் கூடுதல் ஊட்டம் பெற்று முடி நன்றாக வளரத் தொடங்கும். குழந்தை பிறந்ததும் ஓமோன்களின் செயற்பாடுகள் வழக்கம்போல ஒரு கட்டுக்குள் வந்துவிடும். அந்தச் சமயத்தில்தான் கூந்தல் உதிரும் பிரச்சினை தலைதூக்கும். இதைத் தடுக்க வழியில்லை என்றாலும், ஊட்டச்சத்து மிக்க உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்துச் சாப்பிட்டுவர, மீண்டும் முடி இயல்பாக வளர வாய்ப்புள்ளது.

கர்ப்பமடைந்த ஒரு சில மாதங்களில் தாயின் மார்பகம் தாய்ப்பால் சுரப்பதற்கு ஏதுவாக, அளவில் பெரிதாகத் தொடங்கும். குழந்தை பிறக்கும் போது முழுவளர்ச்சியடைந்து விடும்.

கர்ப்பகாலத்தில் நம் வயிற்றின் தசைப் பகுதிகள் கர்ப்பப்பை விரிவடைவதற்கு ஈடுகொடுத்து விரிவடையச் செய்கிறது. குழந்தை பிறந்தும் கர்ப்பப்பை தானாகவே சுருங்கிவிடும். ஆனால் விரிவடைந்த வயிற்றின் தசைப் பகுதிகளோ பழைய நிலைக்கு வர நாளாகும்.

இது தெரியாமல் பல பெண்கள் 'டொக்டர்! என் வயிற்றைப் பார்த்தால் இன்னொரு குழந்தை உள்ளே இருக்கும் போலிருக்கே...' என்று கேலியாக சில சமயம் சந்தேகமாகக் கூடக் கேட்பதுண்டு.

இப்படிப் பெரிதாகிப் போன வயிற்றை இயல்பான நிலைக்குக் கொண்டு வர, குழந்தை பிறந்ததுமே பெல்ட் போட வேண்டும் என்று பல வீடுகளில் இன்னும்கூட சொல்கிறார்கள். பெல்ட் போட்டால் இந்த நிலை உடனே சரியாகிவிடும் என்று நினைக்கிறார்கள். இது மிகத் தவறு. ஏன் தெரியுமா? குழந்தை பிறந்தவுடன் அதுவரை விரிந்திருந்த வயிற்றுப் பகுதியின் தசைப்பகுதிகள் தளர்ந்து போயிருக்கும். பெல்ட் போடுவதால் ஏற்படும் இறுக்கத்தால் இந்தத் தசைகள் வலுவிழந்துதான் போகுமே ஒழிய, அளவில் மாறுதல் ஏற்படாது. தளர்ந்து போன வயிற்றுத் தசைகள் மேலும் தளர்ந்து போகாமல் இருக்க, சரியான அளவிலான பான்டீஸ் (Panties) அணிந்தாலே போதும். அதனால் வயிற்றை அதன் இயல்புப்படியே சுருங்கச் செய்வதுதான் சிறந்தது. இதற்கென்று சில எளிய பயிற்சிகள் உள்ளன. ☆

# எமது விடுதலைப் போராட்டச் சம்பவங்களை கலைஞர்கள் வெளிக்கொணர வேண்டும்

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை



முல்லைத்தீவு —

எமது விடுதலைப் போராட்டச் சம்பவங்களைப் போராளிகளே எழுதுகின்ற சூழல் தற்போது உருவாகியுள்ளது என கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் இடம் பெற்ற கவிஞர் நாவண்ணனின் "சுனாமியின் சுவடுகள்" நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது -

எமது விடுதலைப் போராட்டத்தில் எவ்வளவோ சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. அந்தச் சம்பவங்கள் எழுத்துருவிலோ, படத்தொகுப்பாகவோ வெளிவரவில்லை. ஆனால் மேலைத்தேய நாடுகளில் இடம்பெறும் சிறு சம்பவங்கள் பெரும் ஆணவங்களாக வெளிவந்த வண்ணம் உள்ளது.

ஆனால், எமது விடுதலைப் போராட்ட காலத்தில் கவிஞர்கள், எழுத்தாளர்கள் பலர் இருந்தும் எமது விடுதலைப் போராட்டச் சம்பவங்கள் பெரியளவில் எழுத்துருவிலோ, படத்தொகுப்பாகவோ வெளிவரவில்லை.

எமது விடுதலைப் போராட்ட சம்பவங்களைப் போராளிகளே எழுதுகின்ற சூழல் தற்போது உருவாகியுள்ளது.

அந்த வகையில் சுனாமியின் சுவடுகள் பத்துமாதங்களுக்கு முன்னர் ஏற்படுத்திய கோரத் தாண்டவத்தை எழுதுமாறு இந்தக் கவிஞருக்கு எவரும் சொல்லவில்லை.

கவிஞர் நாவண்ணன் அவர்கள் தாமாகவே முன்வந்து சுனாமியின் சுவடுகள் நூலை உருவாக்கியுள்ளார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அதியுன்னத படைப்பான கரும்புலிகள் காவியத்தை கவிஞரே படைத்தார்.

மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கும் இந்தக் கவிஞர் தாமாகவே முடிவெடுத்து சுனாமியின் சுவடுகளைப் படைத்துள்ளார்.

சுனாமியின் சுவடுகள் எல்லோரும் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

எம்மிடையே வாசிப்புப் பழக்கம் அருகிவருகிறது. வாசிப்புத்திறன் குறைந்து வருகிறது. இதற்குக் காரணம் நூல்களில் உள்ள கருத்துக்களை இலகுவாக விளங்கிக் கொள்ளமுடியாத சூழலே.

அதுமட்டுமல்லாமல் தற்போது பெருமளவு சம்பவங்கள் எழுத்துருவில் அல்லாமல் - படத்தொகுப்புக்களாகவும், ஒலி நாடாக்களாகவும் வெளிவருவதால், மக்கள் அதனையே விரும்பிப் பார்க்கின்றனர். நூல்கள் வாசிக்கும் தன்மை குறைந்து வருகிறது.

ஆனால் சுனாமியின் சுவடுகள் இலகுவான முறையில் வாசித்து விளங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கவிஞர் கவிதைகளில் மட்டுமல்ல சித்திரக் கலையிலும் விற்[illegible]னர்.

எமது விடுதலைப் போராட்டத்தில் இன்னும் எத்தனையோ சம்பவங்கள் நூல் வடிவில் வெளிவர வேண்டியுள்ளது. நூல்கள் வெளிவருவதற்கு எழுத்தாளர்களும் கவிஞர்களும் பாடுபட வேண்டும் எனவும் கூறினார்.

## கார் விபத்தில் சிறுமி காயம்

வவுனியா —

புளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுமி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் ஏ9 வீதியில் புளியங்குளம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் கார் ஒன்று மோதியதில் 9 வயதான தெய்வேந்திரம் சுமங்களா என்ற சிறுமியே படுகாயமடைந்தவராவார்.

## கண்ணன் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டுவிழா !

வடமராட்சி கிழக்கு —

வடமராட்சி கிழக்கு உடுத்துறைப் பிரதேசத்தில் கண்ணன் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை உடுத்துறை கிராம அலுவலர் தவராசா, சுனாமி நடவடிக்கை இணைப்பாளர் வற்மோகன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை கண்ணன் அவர்களின் சகோதரன் சிவா ஏற்றி வைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக கொடியை வடக்கு - கிழக்கு புனர்வாழ்வுக் கழக உறுப்பினர் சிவஞானம் ஏற்றிவைத்தார். முன்பள்ளிக்கான அடிக்கல்லை வடக்கு கிழக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெயசீலன் நாட்டிவைத்தார்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை வடமராட்சி கிழக்கு சுனாமிச் செயலகப் பொறுப்பாளர் பாலையா, சுனாமி இணைப்பாளர் ராஜ்மோகன் ஆகியோர் நிகழ்த்தினர்.

# இரு கட்சிகளுக்கு இடையேயும் ஒருமித்த நிலைப்பாடு வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன்



கிளிநொச்சி —

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒரே கொள்கையின் அடிப்படையில் செயற்படவேண்டும். தேர்தல் பிரசாரங்களின் போது வெவ்வேறுபட்ட அர்த்தங்களில் இனப் பிரச்சினை பற்றி பேசக் கூடாது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் நீண்ட கால போராட்டத்தையும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளையும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசார மேடைகளில் குறைத்து மதிப்பிட்டு கருத்து வெளியிடுவதையும் அவர் கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இனப்பிரச்சினை விவகாரம் தற்போது சர்வதேச மயப்பட்டு விட்டது. அதற்கான தீர்வு முயற்சிகள் நோர்வேயின் ஏற்பாட்டுடன் இடம் பெற்று வருகின்றன. சமஷ்டி அடிப்படையில் தீர்வு ஏற்பட வேண்டுமென கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது. இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் பற்றி தேர்தல் பிரசார மேடைகளில் கொச்சைப்படுத்திப் பேசி வருகின்றார். யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதால் தான் கொழும்பில்கூட அமைச்சர்களும், அரசியல் தலைவர்களும் சுதந்திரமாக நடமாடி திரிகின்றனர்.

ஆனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதனை மறந்து பேசுகின்றார். ஜே.வி.பிக்கும், ஜாதிக ஹெல உறுமயவுக்கும் அடிபணிந்து பேசுகின்றார் என்பது எமக்குத் தெரியும் எனவும் கூறினார்.

## இதயநோயினால் பாதிக்கப்பட்ட குழந்தையை காப்பாற்ற உதவுங்கள்

கிளிநொச்சி —

2 ஆம் குறுக்குத்தெரு, பாரதிபுரம் கிழக்கு, கிளிநொச்சி என்னும் முகவரியிலுள்ள அருந்தவராசா கோபிகா (41 நாள்) என்ற குழந்தை இருதயநோயால் பாதிக்கப்பட்டுள்ளது.

இவரைக் காப்பாற்றுவதற்கு இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்குப் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது.

இவ்வளவு பெரிய தொகை செலுத்தி சிகிச்சை பெறும் நிலையில், இவரது குடும்ப பொருளாதார நிலை இல்லையென்பதால் கருணை உள்ளம் படைத்தவர்களிடமிருந்து குழந்தையின் பெற்றோர் உதவி கோருகின்றனர்.

இதில் கடந்த செவ்வாய்க்கிழமை உதவி செய்யவிரும்புவோர் தமது நிதியை செ.அருந்தவராசா இலங்கை வங்கி, கிளிநொச்சி கிளையில் 30017என்ற கணக்கு இலக்கத்துக்கு அனுப்பி உதவுமாறு பெற்றோர் வேண்டுகின்றனர் என தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டது. இதற்கான கணக்கு இலக்கம் 30027 என்னும் இலக்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### ஒக்ரோபர் 28

1636: அமெரிக்காவின் முதல் பல்கலைக்கழகமான ஹவார்ட் பல்கலைக்கழகம் 'ஜோன் ஹாவார்ட்' இனது பெரு முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்டது.

1831: பிரித்தானியாவைச் சேர்ந்த பௌதிகவியல் மற்றும் இரசாயனவியல் விஞ்ஞானியான மைக்கல் பரடே டைனமோ (மின்பிறப்பாக்கி) செயற்படும் முறையினை முதன் முதலாக செய்து காட்டினார்.

1880: குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க மிகவும் உதவி நிற்கும் கை ரேகைப் பதிவின் முக்கியத்துவம் பற்றிய ஸ்கொட்லாண்ட் மருத்துவவியலாளர் ஹென்றிமோல்ட்ஸின் உடைய ஆய்வுக் கட்டுரை 'நேச்சர்' என்ற இதழில் வெளிவந்தது.

1886: அமெரிக்க சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவை ஒட்டி 'பார்த் ஹோல்ட்டி' என்பவரால் வடிவமைக்கப் பட்ட 'சுதந்திர தேவியின் சிலையை' பிரான்ஸ் அமெரிக்காவுக்கு அன்பளிப்புச் செய்தது.

1893: பிரிட்டனின் முதலாவது நாசகாரிக்கப்பலான எச்.எம்.எஸ். ஹாவோக்கின் வெள்ளோட்டம் இடம் பெற்றது.

1913: திருமணப் பதிவு அதிகாரியின் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட திருமணங்களைத் தவிர, வேறு எந்தவிதமான திருமணத்துக்கும் தென்னாபிரிக்காவில் இடமில்லை என்று தென்னாபிரிக்க நீதிமன்றத்தில் நீதிபதி ஒருவர் தீர்ப்பு வழங்கினார். இந்தியப் பெண்களுக்கு நேர்ந்த இந்த அவமானத்தைப் போக்க, இந்தியப் பெண்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இதற்கு ஆதரவாக மகாத்மா காந்தி தலைமையில் இந்தியத் தொழிலாளர்கள் நியூகாஸில் என்ற இடத்தில் இருந்து டிரான்ஸ் வாலுக்கு சத்தியாக்கிரக யாத்திரையைத் தொடங்கினார்.

1914: வண்ணப்புகைப்பட முறையைக் கண்டு பிடித்துள்ளதாக ஜோர்ஜ் ஈஸ்ட்மன் என்பவர் அறிவித்தார்.

1918: காலிஷியா - ஒஸ்ரியாவிலிருந்து பிரிந்து சென்றது.

[illegible]: பாரிசில் போர் நிறுத்த மாநாடு கூடியது.

[illegible]: செக்கோஸ்லேவேவியா விடுதலை அடைந்ததாக அறிவித்தது.

1924: பிரான்ஸ் அன்பளிப்பாக வழங்கிய சுதந்திர தேவியின் சிலையை தேசியச் சின்னம் என்று அமெரிக்க அரசு அறிவித்தது.

1927: உலகிலேயே முதன் முதலாக சர்வதேச விமான சேவையை 'பான் ஆம்' நிறுவனம் ஆரம்பித்தது.

1940: இத்தாலி - கிரீஸின் மீதும் அல்பேனியா மீதும் படையெடுத்தது.

1950: கடலின் அடித்தளத்தில் மிக உயர்ந்த சிகரங்களை உடைய மலைத் தொடர்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அட்லாண்டிக் மாகடலின் தரைப்பரப்பிலுள்ள ஒரு மலைத் தொடர் 20,000 கி.மீ நீளமுடையது எனக் கண்டறியப்பட்டது.

1960: கியூபா ரஷ்யாவிடமிருந்து ஏராளமான ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதாகவும், ரஷ்ய இராணுவ தொழில் நுட்பவியலாளர்களையும் பணியில் அமர்த்தியிருப்பதாகவும், ஏனைய அமெரிக்கக் கண்ட நாடுகளில் புரட்சியைத் தூண்ட ஆயுத உதவி செய்யும் நிலையில் இருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு அமெரிக்கா எச்சரிக்கைக் குறிப்பு அனுப்பியது.

1971: ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்வதற்கு ஆதரவாக 112 வாக்குகள் வித்தியாசத்தில் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1972: பிரண்ஸ், பிரிட்டன், மேற்கு ஜேர்மனி, ஹொலண்ட், ஸ்பெயின் ஆகிய நாடுகள் கூட்டாக வடிவமைத்த 'ஏ-300 யூரோப்பியன் ஏயார்பஸ்' என்னும் விமானத்தின் வெள்ளோட்டம் நடைபெற்றது.

1974: மொரோக்கோவில் 'ராபாத்' என்ற இடத்தில் ஜோர் தான் மன்னர் ஹீஸ்ஷேன் உட்பட 20 அரபு நாடுகளின் பிரதிநிதிகள் கூடி இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிலிருந்து விடு விக்கப்பட்ட பகுதியில் 'சுதந்திர பாலஸ்தீன நாடு' உருவாக்கப்பட வேண்டும் என்றும் யசீர் அரபாத்தே பாலஸ்தீன மக்களின் ஏகபிரதிநிதி என்றும் தீர்மானம் எடுத்தனர்.

தொகுப்பு : - சந்துரு

## கணிப்பீட்டுத் திட்டம் தொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடல்

கிளிநொச்சி —

பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டம் தொடர்பாக பெற்றோர், மாணவருக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஐ.குகானந்தராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கணிப்பீடு தொடர்பான விளக்கங்கள், கண்காட்சி, அரங்க நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. இந்த நிகழ்வில் பெருமளவான பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறான நிகழ்வுகள் ஆசிரியர், பெற்றோர் பரஸ்பர உறவை மேம்படுத்தும் என்பதில் பாடசாலைச் சமூகம் அகமகிழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

பெருமை, இறுமாப்பு, கடுமை இவை எல்லாம் சிறப்புகளே என்று கருதப்படும் - அவற்றை உடையவர்கள் வெற்றி பெறுவார்களானால். -சார்லஸ் டிகால் -

## நமது நோக்கு

# ரணிலின் வடக்கு கிழக்குப் பிராந்திய சபை புதிய மொந்தையில் பழைய 'கள்' ஆகும்

நாட்டின் இறைமை பாதுகாக்கப்பட்டு, பிரிவுபடாமல் தடுக்கப்படும் வகையில் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்படும். இதற்கென நாட்டின் பிரதான கட்சிகள் இரண்டும் இணைந்து புதிதாக ஒரு தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்கப்போவதாகவும், இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

பிரதான கட்கிகளிரண்டும் இணைந்து செயற்படாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது எனவும், தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு காத்திரமான தீர்வை நோக்கிய நகர்வினை மேற்கொள்ளாதவரை சர்வதேச உதவிகள் எமக்குக் கிடைக்கப்போவது கிடையாது, சர்வதேச உதவிகளும் முதலீடுகளும் எமக்குக் கிட்டாத வரைக்கும் நாட்டை பொருளாதாரரீதியில் கட்டியெழுப்பமுடியாது என்றும் கூறியுள்ள அவரின் பேச்சு பொதுவாக அப்பாவித்தனமான வாக்காளர்களுக்கு கைதட்டி ஆர்ப்பரிக்க வசதியானதொன்றாகவே இருக்கும்.

ஆனால், அதனை ஆழமாகவும், நிதானமாகவும் அனுகுவோர்க்கு அதனூடாகப் பல புதிய செய்திகளும் தெளிவாகவே செய்யும்.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரத்தைப் பகிர்தல் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணலாம் எனக்கூறும் ரணில்- தமிழ்மக்கள் வெறுமனே அற்ப சொற்ப அதிகாரங்களை நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு 'குரங்கு அப்பம் பகிர்ந்த' கதைமாதிரி அதிகாரத்தில் சிலவற்றைப் பகிர்ந்து கொடுத்து சமாளித்துப் பேய்க்காட்டி விடலாமென ரணில் நினைக்கிறார் போலும்.

இந்த வகையில் அவர் 'அதிகார தர்மம்' செய்வதற்கு ஒரு புதிய திட்டத்தையும் அறிவித்திருக்கிறார். அதற்கு பெயர்தான் வடக்கு-கிழக்கு பிராந்திய சபை என்பதாகும்.

ஆரம்பத்தில் 'மாவட்ட சபை' என்று பேய்க்காட்ட முயன்றார்கள். அப்போதைய தமிழ்த் தலைமைகள் அதற்கு இசைந்துபோக முயன்றாலும், விழிப்புடன் இருந்த எழுச்சிமிக்க தமிழ் இளைஞர்கள் - குறிப்பாக விடுதலைப் புலிகள் அந்த ஏமாற்று - சூழ்ச்சிப் பொறிக்குள் தமிழ் மக்கள் விழுந்து அவலமுறாது பாதுகாத்தார்கள். மாவட்ட சபை கூழ்முட்டையாகிப்போன வரலாறு அனைவருக்கும் தெரிந்ததே.

இந்த மாவட்ட சபையை முன்மொழிந்து பேய்க்காட்ட முனைந்தவர்கள் இதே ரணிலின் ஐக்கிய தேசியக்கட்சியில் அக்காலத் தலைமைகளே....

அந்த மாவட்ட சபைக்குள் என்ன இருந்தது என்பது அதனைச் சொன்னவர்களுக்கும் தெரியாது, அதனை ஏற்க முனைந்தவர்களுக்கும் தெரியாது. அந்த ஏமாற்று அரசியல் தந்திரம் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டதால் தமிழினம் பாதுகாக்கப்பட்டது.

அதன்பின்னர் இதே ஐக்கிய தேசியக்கட்சி இந்திய வல்லாதிக்க சக்தியுடன் இணைந்து மிதவாத, சர்ப்பவாத தமிழ்த் தலைமைகளையும் சேர்த்துக்கொண்டு 1988ஆம் ஆண்டு மற்றொரு பாதாளக் கிடங்கினுள் தமிழினத்தைத் தள்ளுவதில் அரைகுறை வெற்றியும் கண்டனர்.

அதற்குப் பெயர்தான் வடக்கு-கிழக்கு மாகாணசபை.

ஆனால், அந்தப் பொறிக்கிடங்குள் விழுந்தவர்கள் மிதவாத, சந்தர்ப்பவாத மற்றும் இனவிரோத அரசியல் தலைமைகள் மட்டுமே!

அப்போதும் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளின் தீர்க்க தரிசன நடவடிக்கையால் பாதுகாக்கப்பட்டனர்.

இப்போதும் அதிகாரமற்ற-வளமற்ற-செயலற்ற மாகாண சபை ஒன்று இயங்கினாலும்கூட, அது தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை - அபிலாஷைகளை வழங்க முடியாத உள்ளூராட்சி சபை போன்ற அமைப்பாகவே இருப்பதை அனைவரும் அறிவர்.

இந்தநிலையில் ரணில் பிராந்திய சபை என்ற பெயரில் வழக்கு-கிழக்கிற்கு அதிகாரங்களுடன் கூடிய அமைப்பொன்றை ஏற்படுத்தி வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வொன்றினை வழங்கப்போகிறாராம்!?


ஒரு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை வழங்கும் திறனற்று இழுத்தடித்துப் பேய்க்காட்டியவர், எதனையும் செய்ய வல்லமையற்றவர் என்பதை தமிழ் மக்கள் நன்கு உணர்ந்தே உள்ளனர்.

அவர் 'புதிய மொந்தையில் - பழைய - விஷமேறிப் போன கள்'ளைத் தரவே முயல்கிறார் என்பது தெளிவு.

தங்களின் தாயகக் கோட்பாட்டை, சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத எந்தத் தீர்வையும் இனிமேல் தமிழினம் ஏற்றுக்கொள்ளப்போவது கிடையாது என்ற சமகால அரசியல் யதார்த்தத்தை ரணில் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை என்பதையே அவரது 'பிராந்திய சபை' அறிவிப்பு புலப்படுத்துவதாக உள்ளது.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




செய்தி:- ஜே.வி.பியின் இனவாதப் பேச்சுக்களுக்கெல்லாம் ஆமாப்போடும் மகிந்தவினால் மீண்டும் யுத்தம் மூளும் அபாயம் அதிகரித்துவருகிறது.

**'ஊர்சுற்றி' யார் பார்வையில்...**

# மனித உரிமைமீறல் பற்றி ஓலமிடுவோர் "பிந்துனுவெவ"வுக்கு என்ன பதில் கூறுவர்?

தன் குற்றத்தை மறைப்பதற்காகப் பிறர் மீது குற்றம் சுமத்திப் பெரிதுபடுத்திக் காண்பிப்பது மோசமான செயல் என்று தெரிந்தும் அதைத் தொடர்ந்து செய்வது உலுத்தத்தனமாகும். இதையேதான் சிங்கள ஆதிக்க சக்திகளும் பேரினவாதிகளும் தொடர்ந்து செய்து தம்மைப் புனிதர்களாகக் காட்டிக் கொள்வதற்கு எத்தனிக்கின்றனர். இதற்கு நம்மவர்களும் இதே செயல்களைச் செய்து கொண்டு அவர்களுக்கு ஒத்தூதி வருகின்றனர். ஆனாலும் எப்படியோ உண்மை உலகுக்குத் தெரிந்து விடுகிறது. அவர்கள் இதையும் கூட மறைத்துத் திரித்து வேஷம் போட்டுக் கொண்டு தானிருக்கின்றனர் என்று நண்பர் பரமசிவம் சொன்னார்.

பண்டாரவளையில் பிந்துனுவெவ "புனர்வாழ்வு" முகாமில் தமிழ் இளைஞர்கள், சிறுவர்கள் இருபத்தெட்டுப்பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டுப் புனர்வாழ்வளிப்பதற்காக இந்த முகாமில் வைக்கப்பட்டிருந்தார்களாம். இவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்காகவும், பாதுகாப்பளிப்பதற்காகவும் இந்த முகாமில் சிறிலங்கா காவல்துறை அதிகாரிகளும் மற்றும் ஊழியர்கள் சிலரும் கடமையாற்றுவதற்கு அங்கே இருந்தனர். இவ்வளவு பாதுகாப்புக்கிடையில் புனர்வாழ்வு பெறுவதற்காக வைக்கப்பட்டிருந்த நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ்ச் சிறுவர்களும், இளைஞர்களும் மிருகங்களைவிடக் கேவலமான முறையில் கொலை வெறி பிடித்தவர்களால் வெட்டியும், குத்தியும், சுட்டும் எரித்தும் படுமோசமாகக் கொலை செய்யப்பட்டனர்.

கசாப்புக் கடைக்காரர் என்று சொல்லப்படும் இறைச்சிக் கடைக்காரர்களை விட மோசமாக இந்தச் செயலில் ஈடுபட்டவர்கள் நடந்து கொண்டனர். இந்த அநியாயப் படுகொலையில் சம்பந்தப்பட்டவர்கள் ஒருவர் கூடத் தண்டிக்கப்படாமல் தப்பிவிட நாட்டில் நடைபெறும் கொலைகளுக்கெல்லாம் விடுதலைப்புலிகளே காரணம் என்று பேரினவாதிகளும், பேரினவாத ஊடகங்களும் இவர்களுக்குத் துணையாக நம்மட சங்கூதிகளும் ஊதிக்கொண்ட இருக்கின்றனர். இந்தச் சமயத்தில் பிந்துனுவெவவில் மூடி மறைக்கப்பட்ட பயங்கரப்படுகொலைகளை ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இப்போது அம்பலப்படுத்தியிருக்கிறது. இதைத்தானே நீர் சொல்கிறீர் என்று கேட்டேன்.

ஓமோம் அதைப்பற்றித்தான் சொல்கிறேன். இந்தச் சம்பவம் நடந்ததுமே கொழும்பு ஊடகங்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சில ஊடகங்கள் இந்தக் கொலைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பிருப்பதாகக் கூறி செய்திகள் வெளியிட்டுத் திசை திருப்ப முயற்சி செய்தன. பின்னர் ஊர் மக்கள் தான் தாக்குதல்களில் ஈடுபட்டதாகச் செய்திகள் வெளியிட்டன. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மலையகப் பகுதியைச் சேர்ந்த இளைஞனின் சடலம் அங்கு கொண்டு போன சமயத்தில் அங்கும் கிளர்ச்சிகள் ஏற்பட்டது. மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் பிந்துனுவெவ சம்பவம் தொடர்பாகக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து நடவடிக்கைகளில் இறங்கிய தால் அவர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக் கப்பட்டார். இந்தச் சமயத்தில் அரசியல்வாதிகள் பாதிக்கப்பட்ட அப்பாவி இளைஞர்களுக்குக் குரல் கொடுக்கவில்லை. அரசாங்கமும் பராமுகமாக இருந் தது என்று பரமசிவம் சொன்னார்.

பிந்துனுவெவப் படுகொலைச் சம்பவம் எப்படியோ நீதிமன்றத்துக்குச் சென்றது. இதில் சிலர் விடுதலை செய்யப்பட்டனர். மற்றும் சிலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்பட்டது. தண்டனை பெற்றவர்கள் அனைவருமே பொலிஸ் உத்தியோகத்தர்கள்; நீதிமன்றத்தில் எதிரிகள் மீது குற்றம் சுமத்தி வழக்குத் தொடுத்தவர்களும் பொலிஸ் அதிகாரிகள்தான்; அவர்களுக்கு வழக்கு நடத்துவதற்கு உதவியவர்களும் பொலிஸ் உத்தியோகத்தர்கள்தான். மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த எதிரிகளான பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெறுவதற்காகத் தங்கவைக்கப்பட்டிருந்த அப்பாவி இளைஞர்களும், சிறுவர்களுமாக 28 பேர் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டிருந்த போதிலும் இதில் சம்பந்தப்பட்ட எவரையும் கண்டு பிடித்துத் தண்டனை பெற்றுக் கொடுக்க முடியவில்லை. அப்படியானால் இந்தக் கொலைகளைச் செய்தவர்கள் யார்? அவர்கள் எங்கே? என்ற கேள்வியை இலங்கையில் எந்தவொரு அரசியல் தலைவரோ ஆன்மீகத் தலைவரோ இன்று வரை எழுப்பவில்லை. அப்படியானால் நீதி நியாயம் பற்றி யார் கேட்பது, யார் பேசுவது? என்று பரமசிவம் கேட்டார்.

இதே சமயம் பிந்துனுவெவ படுகொலைகள் பற்றி வெளி உலகத்துக்குச் சாட்டுச்சொல்வதற்காக ஒரு விசாரணைக்குழுவொன்றை ஜனாதிபதி நியமித்தார். இந்த ஆணைக்குழு தனது கடமையை ஒழுங்காகச் செய்து தனது அறிக்கையையும் தயாரித்துச் சமர்ப்பித்துவிட்டது. சில ஆணைக்குழு அறிக்கைகள் வெளியே விடாமல் கிடப்பில் போட்டு மூடிவிடுவது இங்கு வழக்கம். பிந்துனுவெவ விசாரணைக்கு அறிக்கையையும் கிடப்பில் போட்டு விட்டனர். நாடாளுமன்றத்தில் கூட இதைப்பற்றி யாரும் கேள்வி எழுப்பவில்லை. அநேகமாக எல்லோருமே இதை மறந்துவிட்டனர் என்றே சொல்லலாம். ஆனால் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த அறிக்கையை எப்படியோ எடுத்து புதுடெல்கியில் வெளியிட்டு இலங்கையின் "மனிதாபிமானத்தையும் நேர்மை, நீதி, நியாயம், பாரபட்சமின்மை, மனித உரிமைகளின் பாதுகாப்பு" ஆகிய பண்புகளை அம்பலத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. அதாவது வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. இதுதான், இந்த ஜனநாயகத்தைத்தான் சங்கரியார் வெகுவாகப் புகழ்ந்து, இந்த ஜனநாயகம் புலிகளிடமில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். இவர்கள்தான், விடுதலைப்புலிகள் கொலை செய்கிறார்கள், மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கிறார்களில்லை, சிறுவர்களைக் கடத்துகிறவர்கள், படைகளில் சேர்க்கிறார்கள் என்று ஓலமிடுகிறார்கள். இந்த 28 பேரும் புலிகளிடமிருந்திருந்தால் இப்படிக் கோரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கமாட்டார்களே என்று சொன்னேன்.

நீர் சொல்வது சரிதான் என்று சொன்னபடி பரமசிவம் நடந்தார்.

தேர்தல் அறிக்கை ... சிலம்பு

# தேர்தல் அறிக்கைகளும் தமிழ்த் தேசியமும்




மகிந்தவின் சிந்தனைகள் என்று கூறப்படும் தேர்தல் அறிக்கையானது மீண்டும் நாட்டில் இரத்தக்களரியைஏற்படுத் தப்போகும் அறிக்கையாகவே தெரிகிறது. தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல் அமைப்புக்குள் தீர்வு காணமுடியாது என்பதையும், சர்வதேச நாடுகளும் இவ்வாறு ஒற்றையாட்சிக்குள் தீர்வு காண முடியாது என்று கூறியுள்ள யோசனைகளை நிராகரித்தும், எவ்வாறு கௌரவமான சமாதானத்தை மகிந்த வால் கொண்டு வரமுடியும் என்பது கேள்விக்கும், ஆச்சரியத்துக்கு முரியதாகும்.

பகுதி – 5

குழப்பங்களும், முரண்பாடுகளும் நிறைந்த அரசியல் வெற்று வேட்டுக்களைத் தேர்தல் அறிக்கையில் எழுதிவிட்டு, அதற்குச் சிந்தனைகள் என்று பெயர் வைத்து அழைப்பதால் மகிந்த சிந்தனையாளர் வரிசையில் இடம் பெறப்போவதுமில்லை. தேர்தலின் அடுத்த நாள் தேர்தல் அறிக்கைகள் பத்திரப்படுத்தி வைக்கப்படும் பொருளாக இல்லாமல், வீசி எறியப்படும் காகிதமாகவே இருக்கும் என்பது பலம். அது எங்கேயும் வீசி எறியப்படலாம்.

இதுவரை மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கைகளைப் பார்த்த நாங்கள், இனி மேல் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் அறிக்கை தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு என்ன வழி கண்டுள்ளது என்பதைச் சற்று ஆராய்வதே நல்லதாகும்.

பண்டாரநாயக்க 1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் என்ற குரலை எழுப்புவதற்கு, 12 ஆண்டுகளுக்கு முன்னரே அதாவது 1944 ஆம் ஆண்டில் சிங்களம் ஆட்சி மொழியாக வேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவந்தவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன. இன்றைய நிறைவேற்று ஜனாதிபதி அரசியலமைப்பைக் கொண்டு வந்தவரும் ஜே.ஆரே ஆகும். அரசியலில் 'குள்ளநரி' என்ற பெயர் பெற்றவர். தமிழினத்தின் தேசியத்தைச் சிதைப்பதில் பாரிய பணிகளை மேற்கொண்டவரும், யுத்தம் என்றால் யுத்தம், சமாதானம் என்றால் சமாதானம் என்ற கூறி யுத்தத்தைத் தமிழ் மக்கள் மேல் திணித்ததில் பெரும் பங்காற்றியவரும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவே. அவரது செல்லப் பிள்ளையாக அரசியலில் வளர்த்தெடுக்கப்பட்டவர் ரணில் விக்கிரமசிங்க. எனவே, இவர் ஜே.ஆரின் அரசியல் வாரிசு என்பதை வைத்துக் கொண்டே இவருடைய அரசியல் நகர்வுகளையும், தேர்தல் அறிக்கைகளையும் நோக்க வேண்டும். ஜே.ஆர்பற்றி மேலும் ஒரு சுவையை இங்கு சுட்டிக் காட்டியே ஆகவேண்டும்.

1978 ஆம் ஆண்டில் புதிய அரசியல் யாப்பு அமுல்படுத்தப்பட்டதன் பின்னர், பிரதமராக இருந்த ஜே.ஆர். சிறிலங்காவின் நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவி ஏற்பதற்கு முன்னர், நாடாளுமன்றத்திலேயே பிரியாவிடை உரைகள் நிகழ்த்தப்பட்டன. அவற்றுக்குப் பதிலளித்து, நன்றி தெரிவித்து ஜே.ஆர் ஆற்றிய உரை இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

வடஅயர்லாந்துப் பிரச்சினை போல, வடக்கு கிழக்குப் பிரச்சினையைக் குழப்பத்தில் விட்டு விடக்கூடாது. இதை நான் தீர்த்து வைப்பேன் என்று கூறினார். அப்போழுது தமிழ் மக்களுக்குச் சுயாட்சி வழங்குவீர்களா என்றொரு குரல் கேட்டது. அதற்கு ஜே.ஆர் சுயாட்சி வழங்குவேன் என்று நம்பவில்லையா? என்று பதிலளிக்கிறார். சுயாட்சி வழங்குவேன் என்று கூறாத ஜே.ஆர், வடக்கு அயர்லாந்துப் பிரச்சினை போல, தமிழர் பிரச்சினை நீண்டுவிடக் கூடாது என்பதில் அக்கறை கொண்டு, இராணுவ அடக்குமுறை மூலம் தமிழர் சுயாட்சி உரிமையை, சுயநிர்ணய உரிமையை, தமிழ் மக்களின் இறைமையை நசுக்குவதிலேயே அதிக நாட்டம் கொண்டிருந்தார். இந்தியாவைக் கூட இதற்குள் நுழைய விட்டு, இந்தியப் படைகள் மூலம் தமிழர்களது உணர்வெழுச்சியை நசுக்குவதில் அதிக கவனம் செலுத்தியவர். இவரது அரசியல் வாரிசான ரணில் விக்கிரமசிங்கவும் இவரைப் போன்றே செயற்படுவார் என்பது சொல்லித் தான்தெரியவேண்டியதில்லை.

சமாதானம், சமாதானம் என்று மேடைகளில் பேசிவரும் ரணில் விக்கிரமசிங்க எங்கே சமாதானப் பேச்சுவார்த்தை விடப்பட்டதோ, அங்கிருந்து இடைக்காலத் தன்னாட்சி அலகுபற்றிய பேச்சுவார்த்தையுடன், சமாதானப் பேச்சு வார்த்தை தொடங்கும் என்று தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பாரானால், கொஞ்சமாவது நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்க முடியும். ஆனால், ரணிலின் தேர்தல் அறிக்கையில் இது பற்றி ஏதுவும் கூறப்படவில்லை. பின்னர் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளான தாயகக் கோட்பாட்டையோ, சுயநிர்ணய உரிமையையோ, தமிழர் இறைமையையோ ஏற்று ஏதாவது குறிப்பிட்டுள்ளாரா என்றால், அவைபற்றித் தேர்தல் அறிக்கையில் எதுவுமே தெரிவிக்கப்படவில்லை. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றி எதுவும் குறிப்பிடாத ரணில், பேச்சு வார்த்தையை என்ற இடத்திலிருந்து தொடங்கப் போகிறார் என்று கூறாத ரணில், சமாதானத்தை எவ்வாறு கொண்டுவருவார் என்பதற்கு வேறு ஏதாவது பதில் வைத்திருக்கிறாரா தனது தேர்தல் அறிக்கையில்?

இனப்பிரச்சினைக்கு நாட்டைப் பிளவுபடுத்தாத ஒரு தீர்வை ஏற்படுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளார் ரணில். அத்துடன், இனப் பிரச்சினை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் ஒருமித்த இணக்கப்பாடுகள் இருக்கின்றன. இதன் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் தேர்தல் அறிக்கை தெரிவிக்கிறது.

இதிலே குறிப் பிட்ட இணக்கப்பாடு எது? சமஷ்டி என்று மேடைகளில் சந்திரிகா கூறுவது இணக்கப்பாடா? அப்படியெனில் நிறைவேற்று ஜனாதிபதியும், சிறிலங்காசுதந்திரக் கட்சியின் தலைவியாகவுமுள்ள சந்திரிகாவால் தன்னுடைய கட்சிவேட்பாளர் மகிந்தராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையில் ஏன் அதனைத் தெரிவிக்க முடியவில்லை.

அதேபோன்றுரணிலும் கூட சமஷ்டித் தீர்வு என்ற சொல்லைப் பயன்படுத்தாது தவிர்த்துள்ளார்? ஜே.வி.பியினர் சமஷ்டி என்ற சொல்லைத் தனது தேர்தல் அறிக்கையில் சேர்ப்பாரா? என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்க, ரணிலின் பதில் தான் சமஷ்டி என்ற சொல்லாகும்.

(தொடரும்...)

நேர்காணல்... எஸ்.சந்தானம்

# சிற்பக் கலையை பொறுமைமிக்கவர்களே பழகி அதனைத் தொழிலாகக் கொள்ளவும் முடியும்!

**சிற்பக் கலைஞருடன் ஒரு சந்திப்பு**

**சங்கீதம், நடனம், சித்திரம் என கலைகள் ஏராளம் உள்ளன. இதில் சிற்பக் கலை என்பது எல்லோருக்கும் கைவந்த கலையாக இருக்க முடியாது. சிறுவயதிலிருந்தே ஆர்வம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை இவற்றின் மூலமே சிறந்த சிற்பக் கலைஞராகத் திகழ முடியும்.**

இலங்கையில் மட்டுமல்ல ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலும் இன்று இந்து மதம் சிறப்பாக மக்களால் பின்பற்றப்படுகின்றது. 'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி.

கோவில்களில் சுவாமி வீதி உலா வரும் போது பிரமாண்டமான வாகனங்களிலேயே சுவாமி எழுந்தருளி வீதி வலம் வருவார். அத்தகைய கோவில் வாகனங்களையும், சிற்பங்களையும் தனது மதி நுட்பத்தாலும், கை வண்ணத்தாலும் உருவாக்கும் உடுவில் காளி கோவிலடியில் உள்ள தம்பி ஐயா குகதாசன்(குகன்) தனது தொழில்



பற்றி இங்கு குறிப்பிடுகின்றார்.

– கோவில் வாகனங்கள், தேர்ச் சிற்பங்கள், வீட்டுக் கதவில் பூ வேலைப்பாடுகள் செய்வதைச் சிறுவயதிலிருந்தே ஆர்வத்துடன் நோக்குவேன். எனது தந்தையார் ஒரு சிறந்த சிற்பாசாரியார்.

– எங்கள் குடும்பத்தில் நான் மூத்த பிள்ளை. குடும்ப வறுமை காரணமாக 7 ஆம் வகுப்பு சித்தி பெற்றபின் பாடசாலைப் படிப்பை கைவிட்டு சிற்பங்கள் செய்வதில் பயிற்சி பெறத் தொடங்கினேன்.

– பயிற்சி பெறும் போது எனது தந்தையாரும் திருநெல்வேலி 'ஸ்ரீவாணன்' செல்லையா கந்தசாமியும் குருவாக விளங்கினர்.

– கடந்த 35 வருடங்களுக்கு முன்னர் நான் தொழில் பழக ஆரம்பித்தேன். அந்தக் காலத்தில் அதாவது 1970-75 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒருநாள் கூலியாக இரண்டு ரூபா தருவார்கள். அப்போது அந்த இரண்டு ரூபா மிகப் பெறுமதியுடையதாக இருந்தது. அதன் பின்னர் தொழில் வளர்ச்சி பெற்றதும் நாள் சம்பளமாக 5 ரூபா தருவார்கள்.

– முதன் முதலாக என்னால் உருவாக்கப்பட்ட 'அன்னப்பட்ஷி' வாகனம் உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் இன்றும் உள்ளது. அந்தக்காலத்தில் மரம் பெறுவதில் பாரிய சிக்கல்கள் இல்லை. நினைத்தவுடன் தரமான மரத்தை வாங்க முடிந்தது. சுமார் 5000-6000 ரூபாவுக்குள் ஒரு வாகனத்தை உருவாக்க முடியும்.

– இப்போது வாகனங்களுக்கான மரம் பெறுவதில் பல நெருக்கடிகள் உள்ளன. குடாநாட்டில் அனுமதி பெற்றே மரம் தறிக்க வேண்டும். இடைத்தரகர்களுக்கு கொமிஷன் கொடுக்க வேண்டும். போக்குவரத்துக்கு அதிக பணம் செலவாகின்றது. இதனால் இப்போது ஒரு வாகனம் செய்து முடிக்க 45 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை செலவாகிறது. வாகனம் செய்யக் கூடிய தொழிலாளர்கள் பலர் இருந்தும் மரத் தட்டுப்பாடு, தொழிலாளர் தட்டுப்பாடு கூலிகள் அதிகம் போன்ற காரணங்களால் பலர் இந்தத் தொழில் செய்வதைக் குறைத்துக்கொண்டுள்ளனர்.

– மஞ்சவுணா, பலா, மாவிலங்கை, வேம்பு போன்ற மரங்கள் வாகனங்கள் செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. ஆதிகாலத்தில் தேக்க மரத்திலும் வாகனங்கள் செய்யப்பட்டன.

– ஊரெழு பர்வதவர்த்தனி அம்மன் கோவிலுக்குக் காராம்பசு, அன்னம், மயில், சிங்கம் முதலிய வாகனங்கள் செய்து கொடுத்தேன். இவற்றைப் பார்த்தே ஏனைய கோவில்களான காரைநகர் முருகன், இணுவில் கந்தசாமி கோவில், ஏழாலை அம்மன் கோவில், மல்லாகம் சாளம்பை முருக மூர்த்தி கோவில் மயிலணி அம்மன் கோவில், சங்கானை நிற்சாமம் வைரவர் கோவில், கந்தரோடை அருளானந்த பிள்ளையார் கோவில், பிரான்பற்று முருகன் கோவில் முதலிய கோவில் உபயகாரர்கள் என்னிடம் வந்து கேட்டுக் கொண்டதற்கிணங்க சிங்கம், மயில், நாய், எலி, சுழலும் சூரன், சப்பறம் போன்ற வாகனங்களைச் செய்து கொடுத்துள்ளேன். இங்கு மட்டுமல்ல வன்னியில் முள்ளியவளை, தண்ணீரூற்றுப் பிள்ளையாருக்கு யானை வாகனமும், கற்சிலைமடு நாகம்மாள் கோவிலுக்கு நாகபாம்பு வாகனமும் செய்து கொடுத்துள்ளேன்.

– வெளிநாடுகளுக்குக்கூட வாகனம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதாவது லண்டன் முருகன் கோவில் தேருக்கு ஒரு சோடி குதிரையும், சுவிற்சர்லாந்திலுள்ள ஒரு கோவிலுக்கு சர்ப்ப வாகனமும், தேருக்கான யாழியும் செய்து அனுப்பப்பட்டுள்ளது.

– இவை மட்டுமல்ல வீட்டுக் கதவுகளில் செய்யப்படும் சிற்பங்களில் இலக்குமி, தீப நாயகி, அன்னப்பட்ஷி, பூ வேலைப்பாடுகள், நாசித்தலை வில்லுப்பலகை என்பனவும் உருவாக்கப்படுகின்றது.

– எனது சிற்பக்கலையை வியந்து பாராட்டிய ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் 29/07/2003இல் 'சிற்பாசாரிய திலகம்' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தனர்.

– சிற்பக்கலைஎன்பது பொறுமை மிக்க தொழில். பொறுமையாக நேரத்தை செலவழித்தே சிற்பங்களை உருவாக்க வேண்டும். அப்



படிப்பட்ட வேலைக்கு பொறுமையான தொழிலாளர்களை அமர்த்த வேண்டும். இந்தக் காலத்தில் பலரும் குறுகிய நேரத்தில் கூடிய பணம் சம்பாதிக்கவே நினைக்கின்றனர். இதனால் பொறுமை மிக்கவர்களைத் தேடிப்பிடிப்பதில் மிகுந்த கஷ்டம் உள்ளது.



பொறுமை மிக்கவர்களாக இருப்பவர்களும் நீண்ட காலத்துக்கு நிற்க மாட்டார்கள். தாமாகச் சொந்தமாகத் தொழிலை ஆரம்பித்து விடுவார்கள். அந்த வகையில் என்னிடம் தொழில் கற்றுக் கொண்ட பலர் தனிப்பட்ட முறையில் தொழிலை மேற்கொள்கின்றனர். அவர்களுள் கோப்பாயைச் சேர்ந்த பிரதீபன், பருத்தித்துறையிலுள்ள ரவிவர்மன் ஆகியோர் மிகச் சிறந்த சிற்பாசாரியார்களாகத் திகழ்கின்றனர்.

– தற்போது என்னோடு உடுவிலைச் சேர்ந்த வடிவேலு கஜேந்திரன், தயாளசெல்வன் நிஷாந்தன், நவாலியைச் சேர்ந்த மா.வைத்திலிங்கம் ஆகியோர் உதவி புரிந்து வருகின்றனர்.

– எத்தனை பேர் உதவினாலும் அவசரமான வேலைகளைப் பொறுப்பேற்க முடியாது. காரணம் மரம் பதமான நிலைக்கு வரவேண்டும். நன்றாகக் காய்ந்த மரங்களே வேலைக்கு இதமாக இருக்கும். இதனால் குறைந்தது ஒரு வாகனம் செய்து முடிக்க 6 மாதங்களாவது தேவைப்படும்.

– இன்று சாதாரண தொழிலாளிக்கு ஒரு நாள் சம்பளமாக 500 ரூபாவிலிருந்து 600 ரூபா வரையும் திறமையான தொழிலாளிக்கு 800 ரூபாவும் வழங்கப்படுகிறது.

– 50 ஆயிரம் ரூபா வேலையை பொறுப்பேற்கும்போது, 10 ஆயிரம் ரூபா முற்பணமாக பெறுகிறோம். எஞ்சிய பணத்தை மீதி வேலை நடைபெற்று முக்கால் திட்டம் முடிவடையும் போதே பெறமுடியும். ஆகவே 10 ஆயிரத்தைக் கொண்டே மரம் கொள்வனவு, தொழிலாளர் கூலி என்பவற்றையும் கொடுக்க வேண்டியுள்ளது. மீதிக்காசு எமது கையால் வழங்கப்படுகிறது. இதனால் பண நெருக்கடிநிலை தோன்றுகிறது. இதனைத் தவிர்ப்பதற்கு வங்கிகள் கடன் தருவதற்கு முன் வந்தால், எமது தொழிலை மேலும் விருத்திசெய்யலாம் எனக்கூறி முடித்தார்.

# வவுனியா தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்விலிருந்து...









# விடாமல் கொட்டிய மழையால் வெள்ளத்தில் மூழ்கிய சென்னை!




சென்னை —

தமிழ் நாட்டில் கடந்த 4 ஆண்டுகளுக்குப் பிறகு பலத்த மழை பெய்துவருகிறது. வட கிழக்கு பருவ மழை கடந்த 11 ஆம் திகதி முதல் இன்றுவரை ஒரு நாள்கூட விடாமல் தொடர்ந்து பெய்து வருகிறது.

தமிழகம் முழுவதும் இந்த சீசனில் இதுவரை வரலாறுகாணாத மழை கொட்டித் தீர்த்துள்ளது. தென் மாவட்டங்களை விட வட மாவட்டங்களில் மிக பலத்த மழைபெய்துவருகிறது. பருவமழை தொடங்கிய பிறகு அதாவது கடந்த 17 நாட்களில் சென்னையில் நேற்று 3 தடவை அடை மழைபெய்தது.

நான்கு நாட்களுக்கு முன்பு வங்கக்கடலில் புயல் சின்னம் உருவானது. அது நேற்று முன்தினம் மதியம் தீவிரம் அடைந்தது. இதையடுத்து நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு மழை பெய்யத்தொடங்கியது. அந்த மழை கொஞ்சம்கூட ஓயவில்லை. விடிய விடிய பெய்தது. பேய் மழை என்று சொல்லும் அளவுக்கு அடை மழையாகக் கொட்டியது.

கடந்த 2 வார மழை காரணமாக ஏற்கனவே சென்னை மற்றும் புறநகர் பகுதிகள் ஈரத்தன்மையுடன் இருந்தன. நேற்று அடைமழை தொடங்கியதுமே சென்னையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் புகுந்தது.

மழைத் தண்ணீருடன் சாக்கடைத் தண்ணீரும் சேர்ந்து பல வீடுகளுக்குள் புகுந்தன. இதனால் மக்கள் துர்நாற்றத்தை சகிக்க முடியாமல் கடும் திணறலுக்குள்ளானார்கள்.

அடுக்குமாடி குடியிருப்புக்களுக்கும் தண்ணீர் புகுந்ததுள்ளது.

சென்னையில் சுமார் 2 லட்சம் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. குறிப்பாக குடிசை வீடுகள் முக்கால் வாசிக்கும் மூழ்கின. இதனால் வீடுகள் தண்ணீரில் மிதக்கின்றன. இதையடுத்து தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

நேற்றுமுன்தினமிரவு 45 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டனர். நேற்றுக்காலையிலும் மழை ஓயாததால் மக்களின் இயல்புவாழ்க்கை அடியோடு பாதிக்கப்பட்டது. எல்லாப் பணிகளும் அப்படியே முடங்கின.

பலத்த மழை எச்சரிக்கை விடப்பட்டிருந்ததால் மாநகராட்சி அதிகாரிகள் தேவையான எல்லா முன்னேற்பாடுகளையும் செய்திருந்தனர். நேற்றுக் காலை தண்ணீர் புகுந்த வீடுகளில் இருந்து மேலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் 250 மாநகராட்சிப் பள்ளிகள் மற்றும் திருமண மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

மழை நிற்காமல் பெய்வதால் கால்வாய்களில் தண்ணீர் வெள்ளம் போல ஓடுகிறது. பல கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் வீதிகள் வெள்ளக்காடாக உள்ளது. சென்னையில் எங்கு பார்த்தாலும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

எல்லா வீதிகளிலும் தண்ணீர் நின்றது. சில இடங்களில் இடுப்பு அளவுக்கு தண்ணீர் நிற்கிறது. பல இடங்களில் வீதியின் குறுக்கே மரங்கள் விழுந்ததில் பஸ் போக்குவரத்து பல இடங்களில் நிறுத்தப்பட்டது.

ரயில் தண்டவாளங்கள் அனைத்தும் தண்ணீரில் மூழ்கிக் கிடக்கின்றன. இதனால் மின்சார ரயில் போக்குவரத்தும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டது. வெளியூர்களில் இருந்து சென்னை வரும் ரயில் நிறுத்தப்பட்டது. இதனால் பயணிகளும் கடும் அவதிக்குள்ளாகினர்.

விமான சேவையும் பாதிப்புக்குள்ளானது. கடுமையான மேகமூட்டம் நிலவுவதால் சென்னை வந்த விமானங்கள் திருவனந்தபுரத்துக்கு திருப்பி விடப்பட்டன. சென்னையில் இருந்து செல்லும் விமானங்களும் தாமதமாகப் புறப்பட்டுச் சென்றன.

சென்னையை மிதக்க வைத்துள்ள மழையால் பள்ளி, கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை அளிக்கப்பட்டது. அரச அலுவலகங்கள் முடங்கின. மிக அத்தியாவசிய பணி தவிர மற்ற எல்லாப் பணிகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இந்த மழையால் சென்னையில் பல இடங்களில் கால்நடைகள் பெருமளவில் பலியாகியுள்ளன.

இதேவேளை, வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுநிலை காரணமாக தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழை பெய்து வருகிறது. இந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை மேலும் வலுவடைந்து புயல் சின்னமாக மாறியுள்ளது. நேற்று முன்தினம் இரவு சென்னைக்கு தென்கிழக்கே வங்கக் கடலில் 450 கிலோமீற்றர் தொலைவில் இந்தப் புயல் சின்னம் மையம் கொண்டிருந்தது.

இது மேலும் வலுப்பெற்று வட மேற்குத் திசையில் நகர்ந்து வருகிறது. தற்போது சென்னை அருகே 400 கிலோமீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ளது. அது தமிழக கடற்கரையை நோக்கி நகரக்கூடும்.

இதன்காரணமாக அடுத்து 48 மணி நேரத்துக்கு தமிழ் நாட்டின் வடக்குப் பகுதியிலும், புதுச்சேரியிலும் பலத்த காற்றுடன் கன மழை பெய்யும் என்று சென்னை வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, சென்னையில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் கடல் அலையின் சீற்றம் அதிகரித்துள்ளது. காற்று பலமாக வீசுவதால் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை.

சென்னையில் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியிலிருந்து இடைவிடாது மழை கொட்டுகிறது. நேற்றுக்காலை 8.30 மணிவரை 27 செ.மீ மழை பெய்துள்ளது.

## கடலில் தத்தளித்த 150 பேர் மீட்பு!

ஏதென்ஸ் —

இத்தாலிக்குள் திருட்டுத்தனமாக நுழைவதற்காக இந்தியர்கள் உட்பட 150 இளைஞர்கள் சென்று கொண்டிருந்த படகு ஆபத்தான நிலையிலிருப்பதாக தகவல் கிடைத்ததையடுத்து அவர்களை கிரீஸ் கப்பல் மீட்டுள்ளது.

கிரீஸ் அருகேயுள்ள கிரீட் தீவில் இது நடந்துள்ளது. இந்தியா, ஈராக் மற்றும் எகிப்து நாடுகளைச் சேர்ந்த இந்த இளைஞர்கள் இத்தாலிக்குள் திருட்டுத்தனமாக நுழைவதற்காக பலஸ்தீன துறைமுக நகரான ரபாவிலிருந்து வந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

## உலகின் மிகப்பெரிய ரொட்டி

ஏதென்ஸ் —

கிரிஸ் நாட்டைச் சேர்ந்த கோடாஸ் டாசியோஸ் என்பவர் பட்ராஸ் நகரில் ஹோட்டலை நடத்தி வருகி றார். இந்த ஹோட்டலில் உலகிலேயே மிகப் பெரிய ரொட்டியை கோஸ்டாஸ் தயாரித்துள்ளார். இதன் நிறை ஆயிரத்து 850 கிலோ ஆகும்.

2 தொன் இயற்கை எரிவாயு தாங்கியில் இது தயாரிக்கப்பட்டது. 100 கிலோ உப்பு, 150 கிலோ அரிசி பொருட்களுடன் பன்றிக்கறி சேர்த்து இந்த ரொட்டி தயாரிக்கப்பட்டது.

## 40 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள்.....

இலங்கைத் தீவு பண்டைக்காலம் தொடக்கம் தமிழ் அரசுகளைக் கொண்டதற்கான வரலாற்றுச் சான்றுகள் உண்டு. தமிழரின் தாயக பூமியான வடக்கு - கிழக்குப் பிரதேசம் தமிழரின் பூர்வீக பூமியாக இருந்துள்ளது. ஐரோப்பிய தேசம் ஏற்படுத்திய காலணித்துவம், அதனூடாக பிரித்தாளும் தந்திரம் ஆகிய தமிழர்களின் பண்டை அரசுகளையும் தன்னாட்சி உரிமைகளையும் தமிழ் அரசுக்கான இறைமையையும் இல்லாமற்செய்தது.

சிங்கள தேசம் தமிழீழத்தின் மீது மேற்கொண்ட உக்கிரமானபோர் நடவடிக்கைகளை எதிர்த்து நிற்கவேண்டிய காலத்தின் கட்டாயம் மக்களுக்கு ஏற்பட்டது. மக்களோடு மக்களாக புலிகள் இந்த இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராக தங்களைத் தயார்ப்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை விரைவுபடுத்தினர்.

சிங்கள தேசம் இராணுவ பலத்தையும் சிங்கள பௌத்த பேரினவாதத்தையும் எதிர்த்துப் போரிட்டு 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களையும் ஒரு லட்சத்துக்கு மேற் பட்ட மக்களையும் தேச விடுதலைப் போரில் விதைத்து விடுதலையை நோக்கி விரைந்து நிற்கின்றோம்.

22.02.2002 அன்று இலங்கை அரசுக்கும் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நோர்வே அரசின் அனுசரணையும் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. எனினும், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கூறப்பட்ட சரத்துக்கள் இன்றுவரை நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை.

இயற்கை அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட தாயக மக்களிற்கான மனிதாபிமான உதவிகள் மறுக்கப்பட்டமை, எனவே மூன்று ஆண்டுகளைக் கடந்து நிற்கின்ற போர்நிறுத்த ஒப்பந்தம் கேள்விக் குறியாகி நிற்கின்றது.

தமிழீழ மக்களாகிய நாம் சிங்கள தேசத்தின்மீது நம்பிக்கையிழந்து நிற்கின்றோம். சர்வதேசமே இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வைத் தரவேண்டியுளது. எனினும், கடந்த மாதத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான வரவேற்புத் தடுப்பானது தமிழ் மக்கள் மீதான தடையே எனக் கருதுகின்றோம்.

இவை எமக்கு கவலையையும், வேதனையையும் தருகின்றது. ஆதலால், உலக அரங்கில் ஏற்பட்டு வருகின்ற அரசியல் மாற்றங்களிற்கு ஏற்ப தமிழீழ தேசத்தையும், தமிழீழ அரசியல் பூர்வீகத்தையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் அங்கீகரிக்கவேண்டுமென சர்வதேச சமூகத்தை இந்த நேரத்தில் நாம் வேண்டி நிற்கின்றோம்.


இந்த நிலையில் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான எந்தவொரு தீர்வையும் முன்னெடுக்கமாட்டார்கள் என்பதையும், அவர்களே மீண்டும் சமகால அரசியல் அரங்கில் உறுதிப்படுத்தி வருகின்றனர். இந்த உண்மைநிலை காரணத்தால் தீர்க்கமான முடிவகளை எடுக்கவேண்டியவர்களாக சிங்கள பௌத்த பேரினவாதத்தால் நிர்ப்பந்தப்பட்டிருக்கின்றோம்.

எனவே, எமது தாயக தேசத்தை ஆக்கிரமித்து நிற்கின்ற இராணுவம், எமது தாயகத்தை விட்டு உடனடியாக வெளியேறவேண்டும். எமது நிலத்தில், எமது பலத்தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாக வேண்டுமென்றும், அந்த உன்னத மான, உயரிய சுதந்திர வாழ்வை நோக்கி தமிழ்மக்கள் அணிதிரண்ட படியே உள்ளோம் என்பதையும் இந்த எழுச்சிப் பிரகடனத்தின் மூலம் முன் வைக்கும் அதேவேளை, தமிழ் பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும், சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு, எமது மரபுவழித் தாயகம், தேசியம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எம்மையும், எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென்று நாம் சர்வதேச சமூகத்திடம் கோரி நிற்கின்றோம் என்று வவுனியா மக்கள் பேரெழுச்சியுடன் பிரகடனம் செய்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# போர் நிறுத்த உடன்பாட்டை இரத்துச் செய்ய முடியுமா?

## மஹிந்தவிடம் சவால் விடுகிறார் ரணில்



கொழும்பு —

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ போர் நிறுத்த உடன்பாட்டில் இருந்து விலகுவதாக நோர்வேக்கு அறிவித்துவிட்டு, இந்த உடன்பாட்டை ரத்துச்செய்ய முடியுமா என்று சவால் விடுத்துள்ளார் ரணில் விக்கிரமசிங்க.

கொழும்பின் தென்பகுதியிலுள்ள எலிப்பிட்டிய எனுமிடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு சவால் விடுத்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது-

இலங்கையின் இறைமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு விடுதலைப்புலிகளுடன் நான் செய்துகொண்ட போர் நிறுத்த உடன்பாட்டால் அச்சுறுத்தலென பிரதமர் ராஜபக்ஷ என்னை விமர்சித்து வருகிறார். கடந்த நான்கு வருடங்களாக அமைதியாக நாடு உள்ள நிலையில், பிரதமர் பதவியேற்று ஒன்றரை வருடங்கள் கடந்து விட்ட நிலையில், ராஜபக்ஷ போர்நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

எனவே, நாட்டை போர்நிறுத்த உடன்படிக்கை அச்சுறுத்துவதாக அவர் கருதினால், உடனடியாக அதனை இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதியிடம் கேட்கலாம்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகள் அனைத்தையும் பிரதமர் ராஜபக்ஷ, ஜே.வி.பியிடம் அடகு வைத்துவிட்டார் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் வைத்தியசாலைப் பணிகள் ஸ்தம்பிதம்!

கொழும்பு —

சுகாதார சேவை ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் நேற்று நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் பாதிப்படைந்தன.

வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 2500 ரூபா கொடுப்பனவை சுகாதார சேவையாளர்களுக்கு வழங்குகையில் அதனை 50 வீதம் குறைக்கும் வகையில் சுகாதார அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டிருக்கும் சுற்று நிருபத்தை ரத்துச் செய்யுமாறு கோரி சுகாதார சேவையாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டதில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றைய வேலை நிறுத்தப் போராட்டத்தில் சுகாதார சேவையைச் சேர்ந்த சுமார் 75 அயிரம் சேவையாளர்கள் ஈடுபட்டுள்ளனர். சுகாதார சேவையைச் சேர்ந்த 21 பிரிவுகளைச் சேர்ந்த சேவையாளர்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்[illegible]தில் ஈடுபட்டனர்.

தேசிய போதனா மற்றும் பெரிய வைத்தியசாலைகள் 15, 28 தள வைத்தியசாலைகள், 146 மாவட்ட வைத்திய சாலை, 184 சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயங்கள், 84 மத்திய மருந்தகங்கள், 115 கிராமிய வைத்திய சாலைகள், 8 விசேட வைத்தியசாலைகள், 39 நிர்வாக நிறுவனங்கள் மற்றும் 13 ஏனைய வைத்தியசாலைகளில் நேற்று வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்றது.

வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக்குகள் எதுவும் நேற்று இயங்கவில்லை. எனினும் அவசர சிகிச்சைகள் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இன்றும் இந்த வேலைநிறுத்தப் போராட்டம் தொடருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரணிலை ஆதரிப்பதாக தம்மாலோக தேரர் அறிவிப்பு!

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான உடுவே தம்மாலோக தேரர் அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

ரணில் - நாட்டைப் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றக்கூடியவர். நாடு முகம் கொடுத்துள்ள சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவர் என்பதாலேயே ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் உடுவே தம்மாலோக தேரருக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

நாட்டிலுள் விகாரைகளைப் புனரமைப்பது, பிக்குகளுக்கென மருத்துவக் காப்புறுதித் திட்டமொன்றை ஆரம்பித்தல், பிக்குகளின் கல்வி நடவடிக்கைகளுக்கான வசதிகளைச் செய்து கொடுத்தல், பௌத்த சாசன விவகாரங்களை ஜனாதிபதியின் பொறுப்பிலிருந்து பிரதமரின் பொறுப்பிற்கு மாற்றுதல் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பாக இவர்களுக்கிடையில் இணக்கப்பாடொன்று ஏற்படிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் பிரதமர் காத்தான்குடியில் பிரசாரம்!

கொழும்பு —

பிரதமரும் ஜனாதிபதி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ காத்தான்குடியில் நேற்று பிரசாரக்கூட்டத்தில் பங்கேற்றார்.

இந்த நடவடிக்கை காரணமாக காத்தான் குடி பிரதேசத்தின் வழமை நிலை செயலிழந்திருந்தது.

காத்தான் குடியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட பொதுக் கூட்டம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமாலை நடைபெற்றது.

அமைச்சர்களான ஏ.எச்.எம்.பௌசி, அமீர் அலி, ஏ.எல்.அதாவுல்லா, [illegible]கள சமரவீர, பிரதி அமைச்சர்கள் சிறீபதி சூரியாராய்ச்சி, அன்வர் இஸ்மாயில் ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ச ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

பிரதமர் தனது உரையில் ஐ.தே.க பற்றியோ ரணில் விக்கிரமசிங்க பற்றியோ, விடுதலைப் புலிகள் பற்றியோ, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பாகவோ எந்த வித கருத்துக்களையும் தெரிவிக்காமல் பொதுவான விடயங்களுடன் தனது பேச்சை சுருக்கமாக முடித்துக்கொண்டார்.

முஸ்லிம்களின் பாதுகாப்பை பொறுத்தவரை தற்போது சேவையிலுள்ள இராணுவம், விசேட அதிரடிப்படையினரை பலப்படுத்துவதன் மூலம் அதனை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இனப்பிரச்சினைக்கு சமாதானத்தின் மூலமே தீர்வு காணப்படும். மீண்டும் எமது பிள்ளைகள் யுத்தத்திற்கு செல்வதை அனுமதிக்க முடியாது. 1970 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவான போது எனது முதலாவது உரையில் பலஸ்தீனரின் விடுதலைக்காக குரல் எழுப்பினேன்.

நான் இனவாதியுமல்ல, மதவெறி கொண்டவனும் அல்ல சகலரையும் சமமாக மதிப்பவன். முஸ்லிம்களைப் பொறுத்தவரை எனது வெற்றியில் இணைந்து கொள்வதன் மூலம் தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியுமென்றும் அவர் மேலும் கூறினார்.

பிரதமரின் வருகையை முன்னிட்டு மட்டக்களப்பு - கல்முனை வீதியில் கல்லடிப்பாலம் முதல் ஆரையம்பதி வரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவம், பொலிஸ், விசேட அதிரடிப்படை என பாதுகாப்புத் தரப்பினர் கடமையில் ஈடபட்டிருந்தார்கள். வழமைக்கு மாறாக ஆங்காங்கே



சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டு பொதுமக்களும், வாகனங்களும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன.

இந்த நடவடிக்கை காரணமாக பொதுமக்கள் நேற்று பாதுகாப்புக் கெடுபிடிகளை கடுமையாக எதிர்நோக்கினர்.

## தேர்தல் கண்காணிப்புக் குழுவின் இரு பிரதிநிதிகள் யாழ். வருகை!

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை கண்காணிப்பதற்கு வன்முறையற்ற தேர்தல் மத்திய கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் இருவர் நேற்று யாழ். குடாநாட்டுக்கு வருகைதந்தனர்.

எதிர்வரும் 7, 8 ஆம் திகதிகளில் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பை கண்காணிப்பதற்கும், யாழ்.குடாநாட்டு நிலைமைகளை நேரில் பார்வையிடுவதற்குமே இவர்கள் யாழ்.குடாநாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

வன்முறையற்ற தேர்தல் மத்திய கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் நேற்று யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை சந்தித்து தமது வரவை உறுதிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## இளைஞர்களைப்...

போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டன.

கண்காணிப்புக்குழுவினர் சம்பந்தப்பட்ட இடத்துக்குச் சென்று பேச்சு நடத்தியபோதும், படையினர் மசியவில்லை. தேசியத் தலைவரின் படம், கொடிகளை விட்டுவிட்டு வேண்டுமானால் உட்செல்ல அனுமதிப்பதாக படையினர் தெரிவித்தனர்.

ஆனால், தேசியத் தலைவரின் படம், கொடிகள் இன்றி தாம் மாநாட்டுக்குச் செல்லப்போவதில்லை எனக் கூறி இளைஞர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றிரவும் இந்த மறியல் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்றது. (03)

## இருதரப்பும் அழைப்பு....

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக ஒரு கடுமையான நிலைப்பாட்டை எடுக்கும்போது நோர்வேயின் நிலை எப்படி இருக்கும்?

பதில் - இலங்கையில் சம்பந்தப்பட்ட இருதரப்பிடமும் நோர் வேயின் பங்கு குறித்து விருப்பம் தெரிவித்தால் சமாதான வழியில் பங்காற்ற புதிய அரசாங்கம் தயாராகவுள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறோம்.

தேர்தல் முடிந்த பின்னர் இரு தரப்பினரும் நாங்கள் என்ன செய்ய இயலும் என்பதை விபரித்துக் கூற வேண்டும். அதன் பின்னர் சமாதான வழிமுறையில் அந்தப் பங்கை ஆற்ற எங்களை அழைத்தது இருதரப்பினரதும் பொறுப்பாகும்.

இலங்கை சமாதான வழிமுறையில் ஆயுதம் ஏந்திப் போராடும் விடுதலைப் புலிகளுக்கு நீங்கள் ஆதரவாக இருப்பதாக உங்களை விமர்சிப்பவர்கள் கூறுகிறார்கள்.

உங்களுக்குத் தெரியும் நாங்கள் ஆட்சிக்கு வந்து ஒருவாரம் தான் ஆகிறது. ஒரு மத்தியஸ்தராக மூன்றாம் தரப்பு அனுசரணையாளராக நோர்வே ஆற்றிவந்த பங்கை தொடர்ந்து முன்னெடுத்து செல்வோம். இருதரப்பினரும் எங்கள் மீது சந்தேகம் இல்லாமல் இருந்தால் மட்டுமே எமது பங்கை நாம் திறமையாக ஆற்ற முடியும்.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் நீங்கள் ஈடுபடுவது மகிழ்ச்சியைத் தருகிறதா?

நான் என்ன சொல்கிறேன் என்றால் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடனும் தொடர்பினை ஏற்படுத்திப் பேச வேண்டியிருக்கும். அதற்கு நாங்கள் அனுசரணையாளராக இருக்கிறோம் எங்களுடைய செயற்பாடு ஒரு நல்ல நோக்கம் கொண்டது. சமாதானத்தை ஏற்படுத்துவதில் அனைத்து மக்களின் துன்பங்களைக் குறைக்கும் வகையில் எங்களால் பங்காற்ற முடியும். சமாதான வழிமுறைகளை இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளின் கட்டுப்...

இதனையடுத்து இந்தச் சூழல் தொடர்பில் கட்சித் தலைவர்களை அழைத்து தெளிவுபடுத்துமாறு தேர்தல் ஆணையாளருக்கு உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2004 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் ஊழல்களும், துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றதாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பவ்ரல் அமைப்பு ஆகியன தெரிவித்திருந்தன.

எனவே, அண்மையில் தீர்மானிக்கப்பட்ட - நடைமுறைக்கு வராத சட்டத்தை அமுல்செய்து குறித்த பிரதேச வாக்காளர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்துமாறு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டார்.

இதன்கீழ் வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் நியாயமான வாக்களிப்பை உறுதிப்படுத்துமாறும் அவர் உத்தரவிட்டார்.

பிரதம நீதியரசரின் இந்த உத்தரவை தேர்தல் ஆணையாளர், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பவ்ரல் சட்டத்தரணி ஆகியோர் ஏற்றுக் கொண்டனர். (01)

## கண்காணிப்பு...

இந்தச் சந்திப்பில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் உள்ளிட்ட குழுவினர் பங்கு கொள்வர்.

## தமிழீழத் தேசிய...

தேசியப் பண்ணை ஆக்க முன் வருவோர் தேச விடுதலைக்காக தம் இன்னுயிரை ஈந்த மான மறவர்களது விடுதலை வேட்கைக்கும், தாயகம் பற்றி அவர்கள் கொண்டிருந்த எதிர்பார்க்கைக்கும் உயிர்கொடுக்கும் வகையில், துள்ளல் நடையில் மிடுக்கோடு கூடியதாக தேசியப் பண்ணை ஆக்குதல் வேண்டும்.

எமது தாயகத்தின் சிறப்பு, பெருமை, வளம் என்பவற்றை வெளிப்படுத்துகின்ற வகையில் அமைக்கப்படும் தேசியப் பண் - ஈழத்தமிழர்களின் விடுதலை வேட்கையையும், அதற்கு எம்மினம் கொடுத்த விலைகளையும் எமது வழித்தோன்றல்களின் நினைவில் நிலைநிறுத்தக் கூடியதாக பிறமொழிக் கலப்பற்றதாக அமைதல் வேண்டும்.

இவ்வாறாக எமது தேசியப் பண் ஆகக்கூடியது பதினெட்டு வரிகளுக்குள் உயர்வீச்சைக் கொண்டதாக அமையவேண்டுமென எதிர்பார்க்கப் படுகிறது.

தேசியப் பண்ணுக்குரிய ஆக்கங்களை அனுப்புபவர்கள் தமது முழுப் பெயர், முகவரி உள்ளிட்ட விபரங்களையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

உருவாக்கப்படும் தேசியப் பண்ணுக்குரிய ஆக்கங்கள் 27.11.2005 இற்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தாயகத்தில் உள்ளவர்கள் தத்தம் பிரதேச அரசியற்துறை செயலகங்கள் ஊடாகவும் அனுப்பிவைக்கலாம்.

மின்னஞ்சல்: editorial@viduthalaipulikal.com
தொலைபேசி: +94 21 228 5010
தொலைநகல்: +94 21 228 3941


## பணிநிலை வேண்டுகை

நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தில் கீழ்க்காணும் பணியாளருக்கான வெற்றிடங்கள் உள்ளன.

திறமையும், ஆர்வமும், தகைமையும் உடையோர் உரிய ஆவணங்களுடன் 02-11-2005 அன்று காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

**கணனி தட்டெழுத்தாளர்கள் - பக்க வடிவமைப்பாளர்கள்**

- ☆ தட்டெழுத்தாளர்கள் தமிழில் வேகமாகவும் பிழையின்றியும் தட்டச்சு செய்யக் கூடியவர்களாக இருக்கவேண்டும்.
- ☆ பக்க வடிவமைப்பாளர்கள் Photo shop, Coreldraw, Page maker ஆகியவற்றில் அனுபவமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

நிர்வாகப் பணிப்பாளர்
நமது ஈழநாடு.


இப்பத்திரிகை இல.267 ,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.